*__கவனிக்க__.-2020.03.06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி VI இல் 2020 ஆம் ஆண்டிற்கான கேகாலை மாவட்ட நீதாசன வலயங்களில் யூரிமார்களின் பெயர்ப்பட்டியல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2166 - 2020 මාර්තු මස 06 වැනි සිකුරාදා - 2020.03.06**

*2166 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 410 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2020, மாச்சு மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, மாச்சு மாதம் 13 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


*407-B 82014-5,403 (2020/03)*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லூத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.*

*1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.*

*அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.*

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
   (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
   (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
   (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
      (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
      (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
   (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
   (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
   (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
   (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
   (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
   (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
   (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
   (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
   (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
   (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

## நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கைகள் அபிவிருத்தி அமைச்சு

*இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2019/2020*

இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் III இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கான பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. இவ் அறிவித்தலில் "செயலாளர்" என்பது "நிதி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரைக் குறிக்கும்." "சேவை" என்ற சொல் வேறு விதமாகக் குறிப்பிடப்படாத சந்தர்ப்பங்களில் "இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையைக் குறிக்கும்".

2. இப்பரீட்சையின் மூலம் இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் III இற்கான ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

   ஆட்சேர்ப்பானது எழுத்து மூல பரீட்சையின் பெறுபேறுகளிலிருந்தும் பொது நேர்முகப் பரீட்சையிலிருந்தும் மேற்கொள்ளப்படும்.

   பரீட்சைத் திகதி.- இப்பரீட்சை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2020. யூன் மாதம் கொழும்பு நகரில் நடாத்தப்படும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கு உட்பட்ட வகையில் இப்பரீட்சையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரத்தை செயலாளர் கொண்டுள்ளார்.

3. நியமிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 71 ஆகும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைக்கு இணங்கத் தீர்மானிக்கப்படும்.

4. சேவை நிபந்தனைகள் :

   4.1 அரசாங்க சேவையின் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2013.04.05 ஆந் திகதிய 1804/ 50 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள கட்டளைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், அப்பிரமாணக் குறிப்பில் செய்யப்பட்டுள்ள அல்லது இதன் பின்னர் செய்யப்படவுள்ள திருத்தங்களுக்கும், தாபன விதிக்கோவையினதும் நிதிப்பிரமாணக் கோவையினதும் ஏற்பாடுகளுக்கும் 2009.02.20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலொழுங்கு விதிகளுக்கும் உட்பட்ட வகையில் தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்படுவர்.

   4.2 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுள்ளதுமாகும். உங்களுக்கு உரித்தான ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் வருங்காலத்தில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் கொள்கை முடிவுக்கு நீங்கள் உட்படுத்தப்படுவீர்கள். மேலும் நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்/தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். காலத்திற்குக் காலம் அரசாங்கத்தினால் அறிவிக்கப்படும் பிரகாரம் நீங்கள் இந்நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

   4.3 இந்த நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலப்பகுதிக்கு உட்பட்டதாகும். அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நியமனம் நிரந்தரமாக்கப்பட்ட உத்தியோகத்தரொருவர் இப்பதவிக்கு நியமிக்கப்படுவாராயின், அவரது நியமனம் ஒரு வருட பதில் கடமைக்கு உட்பட்டதாக அமையும். இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 03 வருட காலப்பகுதியினுள் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

   4.4 01/2014 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைக்கும் அதன் விளைவான சுற்றறிக்கைகளுக்கும் இணங்க பதவியில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 05 வருட காலத்துக்குள் உரிய அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

5. **மாதாந்த சம்பள அளவுத் திட்டம்**.- 2016.02.25 ஆந் திகதிய 03/ 2016 ஆம் இலக்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 1 ஆம் அட்டவணையின் பிரகாரம் இந்தப் பதவிக்கான மாதாந்த சம்பளமானது - ரூபா 47,615 - 10 × 1,335 - 8 × 1,630 - 17 × 2,170 - 10 × 750 - ரூபா 110,895 (SL- 01-2016) ஆகும். இந்தக் கொடுப்பனவு சுற்றறிக்கையின் அட்டவணை II இன் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.

6. **ஆட்சேர்ப்புக்கான தகைமைகள்** :

(அ) 1. இலங்கைப் பிரசையாக இருத்தல்;
2. சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல்;
3. நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்குப் போதிய உடல் மற்றும் உள ஆரோக்கியத்தை எல்லாவகையிலும் பெற்றிருத்தல்;
4. எந்தவொரு மதத்தைச் சார்ந்த போதகரும் இந்த பரீட்சையில் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்;
5. எந்தவொரு நபரும் இந்த திறந்த போட்டி பரீட்சையை இரண்டு (2) தடவைகளுக்கு மேல் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள். (முன்னைய சேவை பிரமாணத்தின் கீழ் இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவைக்கான தரம் II/ II இற்கு ஆட்சேர்ப்பிற்கான பரீட்சைக்குத் தோற்றுவதற்கான எண்ணிக்கை கருத்தில் கொள்ளப்படமாட்டாது;
6. இப்பரீட்சைக்கு ஆட்சேர்ப்பதற்கான தேவைப்பாடுகள் அனைத்தும் இவ்விண்ணப்பத்தின் முடிவுத் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) **கல்வித் தகைமைகள்** :
(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடனான பட்டமொன்றைப் பெற்றிருத்தல் ; அல்லது
(ii) உயர் நீதிமன்றச் சட்டத்தரணியொருவராக இருத்தல் அல்லது
(iii) பட்டயக் கணக்காளரொருவராக இருத்தல்.

**குறிப்பு**.- (i), (ii), (iii) தகைமைகள் பயன்வலுப்பெறும் திகதி விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியாக அல்லது அதற்கு முன்னரான ஒரு திகதியாக இருத்தல் வேண்டும்.

(இ) வயது.- விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியில் இருபத்திரண்டு (22) வயதுக்குக் குறையாதவராகவும் இருபத்து எட்டு (28) வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (அதற்கிணங்க, விண்ணப்பதாரியின் பிறந்த திகதி 1998.04.06 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ 1992.04.06 ஆந் திகதியன்று அல்லது அதற்குப் பின்னராகவோ இருத்தல் வேண்டும்.)

* அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு ஏற்புடையதாகும் அதிகபட்ச வயதெல்லை முப்பத்தைந்து (35) வருடங்களாகும்.

7. **ஆட்சேர்ப்பு முறை** :

7.1 **எழுத்துப் பரீட்சை**.- பின்வரும் பாடங்களைக் கொண்ட மூன்று (03) வினாத்தாள்களை உள்ளடக்கிய எழுத்துப் பரீட்சையொன்று நடாத்தப்படும். பாடங்கள் மற்றும் அவற்றில் சித்தியடைவதற்குப் பெறவேண்டிய ஆகக்குறைந்த புள்ளிகள் கீழே தரப்பட்டுள்ளன :

| | பாடம் | புள்ளிகள் | சித்தியடைவதற்குப் பெறவேண்டிய ஆகக்குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|
| 01 | கிரகித்தல் | 100 | 40 |
| 02 | நுண்ணறிவு | 100 | 40 |
| 03 | பொது அறிவு | 100 | 40 |

பரீட்சார்த்திகள் எல்லா வினாத்தாள்களுக்கும் தோற்றுவது கட்டாயமானதாகும்.

7.1.1 **எழுத்துப் பரீட்சைக்கான பாடத்திட்டம்** :
பாட இலக்கம் 01 - கிரகித்தல் :
இவ்வினாப்பத்திரம் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்.
ஒவ்வொரு பகுதிக்கும் சம அளவிலான புள்ளிகள் வழங்கப்படும்.

பகுதி I : இப்பகுதியில் கட்டுரையொன்றும் சுருக்கமொன்றும் உள்ளடங்கும்.

பகுதி II : பரீட்சார்த்தியின் மொழி அறிவைச் சோதிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட உரைப் பகுதிகள் சிலவற்றை இரண்டாம் பகுதி கொண்டிருக்கும். இவ் உரைப் பகுதிகளில் கீழே கோடிடப்பட்ட சொற்களின் கருத்தை தனி வாக்கியமாகக் கூறுமாறு அல்லது அது தொடர்பில் விமர்சனக் குறிப்பு எழுதுமாறு அல்லது மாற்றுச் சொற்தொகுதியில் மிகவும் பொருத்தமான கூற்றைத் தெரிவுசெய்து காட்டுமாறு அல்லது தரப்பட்டுள்ள கேள்விக்கான விடைகள் பலவற்றில் சரியான பதிலைத் தெரிவு செய்யுமாறு பரீட்சார்த்திகள் அறிவுறுத்தப்படுவர். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(காலம் : 2 மணித்தியாலம் - 100 புள்ளிகள்)

பாட இலக்கம் 02 - நுண்ணறிவு :- பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றலையும் சரியான முறையில் ஊகித்து தீர்மானங்களை மேற்கொள்ளும் ஆற்றலையும் அளவிடுவதை நோக்காகக் கொண்டு இது தயாரிக்கப்படும். இது ஒரு பல்தேர்வு வினாப்பத்திரமாகும். சுருக்கமாக விடையளிக்கும் வகையில் 50 கேள்விகள் வழங்கப்படுவதுடன் அவை அனைத்திற்கும் விடையளித்தல் வேண்டும்.

(காலம் : 1 மணித்தியாலம் - 100 புள்ளிகள்)

பாட இலக்கம் 03 - பொது அறிவு :- இலங்கையின் புவியியல், அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசாரச் சூழல் உள்ளிட்ட இலங்கையின் முழுச் சூழல் தொடர்பாகவும் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் பெறுகின்ற சமகால நிலைமைகள் தொடர்பிலும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி தொடர்பிலும் பரீட்சார்த்தியின் அறிவைச் சோதிக்கும் விதத்தில் இவ்வினாப்பத்திரம் தயாரிக்கப்படும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(காலம் : 3 மணித்தியாலம் - 100 புள்ளிகள்)

7.2 **சாதாரண நேர்முகப் பரீட்சை**.-

(அ) மேலே விடய இலக்கம் 06 இல் குறிப்பிட்ட ஆட்சேர்ப்புக்கான தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதையும் அதன் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் தொடர்பான வரையறைகளுக்கு உட்பட்டவையாக உள்ளனவா என்பதையும் கண்டறிவதற்காகச் சாதாரண நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படும்.

(ஆ) எழுத்துமூலப் பரீட்சையின் பெறுபேறுகள் வழங்கப்பட்டதன் பின்னர் சாதாரண நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். இதற்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

(இ) சாதாரண நேர்முகப் பரீட்சைச் சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும்.

(ஈ) ஒவ்வொரு பாடத்திலும் ஆகக்குறைந்தது நாற்பது (40) அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்களில் அனைத்துப் பாடங்களினதும் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் அடிப்படையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்கள் சாதாரண நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமை பெறுவர். தகைமை பெற்ற விண்ணப்பதாரர்களிலிருந்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட வேண்டிய விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு எழுத்துப் பரீட்சையில் அவர்கள் பெற்ற திறமை ஒழுங்கு மற்றும் ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ள எண்ணிக்கை என்பவற்றின் அடிப்படையில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். தகைமை பெறும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை மேலே குறிப்பிட்ட எண்ணிக்கைக்குச் சமனானதாக இல்லாத சந்தர்ப்பங்களில் அவ்வாறு தகைமை பெறும் பரீட்சார்த்திகள் மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**கவனிக்க**.- நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவது நியமனம் வழங்கப்படுவதற்கான தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பதாகக் கருதப்படமாட்டாது.

7.3 வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு, ஆட்சேர்ப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கையினரை, ஆட்சேர்ப்புச் செய்யும் போது தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களிலிருந்து எழுத்துப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளை திறமை ஒழுங்கில் இச்சேவையின் தரம் மூன்றிற்கு (III) ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

8. **பரீட்சை மொழிமூலம்**:

(அ) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) பரீட்சார்த்திகள் தாம் பட்டம் பெற்ற அல்லது தொழிற்தகைமையைப் பெற்ற மொழியில் அல்லது அரச கரும மொழியில் பரீட்சைக்குத் தோற்றுவது அவசியமாகும்.

(இ) பரீட்சார்த்தியொருவர் தகைமை பெற்ற பட்டத்தில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளில் சித்தியடைந்திருப்பின் அப்பட்டத்தில் அவர் சித்தியடைந்த பாடங்களில் அதிகமானவற்றில் சித்தியடைந்த மொழியில் அல்லது அரச கரும மொழியொன்றில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

(ஈ) பிரதான பாடத்தை ஒரு மொழியிலும், மேலதிக பாடத்தை மற்றொரு மொழியிலும் சித்தியடைந்துள்ள விசேட பட்டமொன்றைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகள் பிரதான பாடங்களில் சித்தியடைந்த மொழியில் அல்லது அரச கரும மொழியொன்றில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

**குறிப்பு.-** (i) மேலே (ஆ) மற்றும் (இ) இல் குறிப்பிடப்பட்ட தகைமை பெற்ற பட்டம் என்பது 6 (ஆ) ஆம் பந்தியில் உள்ள பட்டங்களை அல்லது தொழிற் தகைமைகளைக் குறிக்கும்.

(ii) விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் விடையளித்தல் வேண்டும்.

(iii) தனது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்ட பரீட்சை எழுதுவதற்கான ஊடக மொழியை மாற்றுவதற்குப் பரீட்சார்த்திகளுக்கு இடமளிக்கப்படமாட்டாது.

9. **பரீட்சை நிபந்தனைகள் :**

(i) விண்ணப்பப்படிவம், இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தை ஒத்ததாக அமைதல் வேண்டும். அதனை 8 1/2" × 12" (A4) தாளில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரித்து விண்ணப்பதாரர் தனது கையெழுத்திலேயே நிரப்புதல் வேண்டும். இதற்கு கணினி மூலம் தயாரிக்கப்பட்ட மற்றும் தட்டச்சு செய்யப்பட்ட விண்ணப்பங்களையும் பயன்படுத்த முடியும். 1.0 இலிருந்து 2.12 வரையிலான தலைப்புக்கள் விண்ணப்பப்படிவத்தின் முதல் பக்கத்திலும் 3.0 முதல் 6.0 வரையான தலைப்புக்கள் அதன் இரண்டாம் பக்கத்திலும் மிகுதி மூன்றாம் பக்கத்திலும் அமையும் விதத்தில் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட வேண்டும் என்பதைக் கவனத்திற்கொள்வது அவசியமாகும். மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்ததாகத் தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்களும், தகவல்கள் முழுமையாகக் குறிப்பிடப்படாத விண்ணப்பப்படிவங்களும் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை கைவசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தை ஒத்ததாக உள்ளதா என்பதை விண்ணப்பதாரர் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறில்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்பட முடியும்.

(ii) பரீட்சைக்காகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்தைப் பதிவுத் தபாலில் 2020.04.06 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் விதத்தில் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி இல. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை- 2019 (2020)" எனப் பரீட்சையின் பெயரை தெளிவாக எழுதுதல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் எந்தவொரு விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கின்ற போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை, சிங்கள விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் எழுதுவது அவசியமாகும்.

(iii) பரீட்சைக் கட்டணங்கள்.- பரீட்சைக்கான கட்டணம் ரூபா 1,200 ஆகும். அதனை எந்தவொரு தபால் அலுவலகத்திலும் விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்புக்கு 20-03-02-13 வரவு வைப்பதற்காகச் செலுத்துதல் வேண்டும். தபால் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்திலுள்ள உரிய கூட்டினுள் ஒட்டுவது அவசியமாகும். இக்கட்டணம் மீளளிப்புச் செய்யப்படமாட்டாது. பற்றுச்சீட்டின் பிரதியொன்றை கைவசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

(iv) விண்ணப்பப் படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபரொருவரால், சமாதான நீதவானொருவரால், சத்தியப்பிரமாண ஆணையாளரொருவரால், சட்டத்தரணியொருவரால் அல்லது பிரசித்த நொத்தாரிசு ஒருவரால், முப்படைகளிலுள்ள அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவரால் பொலிஸ் சேவையிலுள்ள வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தரொருவரால் அல்லது அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தரொருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அரசாங்க சேவையில் மற்றும் மாகாண அரசாங்க சேவையிலுள்ள பரீட்சார்த்திகளின் கையொப்பங்கள் அவர்கள் பணிபுரியும் திணைக்களத் தலைவர்களினால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(v) எல்லா விதத்திலும் முழுமையாகக் காணப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் அனுப்பும் போது விண்ணப்பப் படிவங்கள் தொலைந்தமை தொடர்பில் கிடைக்கும் முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

(vi) விண்ணப்பங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப் பத்திரங்கள் அனுப்பப்பட்டதன் பின்னர் அது தொடர்பில் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அவ் அறிவித்தல் வெளியாகி 02 அல்லது 03 நாட்கள் கடந்ததன் பின்னரும் அனுமதிப்பத்திரம் கிடைக்காவிடின், அவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாகப் பரீட்சைத் திணைக்களத்துக்கு அறிவிப்பது அவசியமாகும். அவ்வாறு அறிவிக்கும்போது விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், முகவரி மற்றும் தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும். கொழும்புக்கு வெளியிலுள்ள விண்ணப்பதாரியாயின், அவ்விபரங்களுடன் தொலை நகல் மூலம் அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்றை அனுப்புவதற்காக விண்ணப்பதாரரின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு, கோரிக்கைக் கடிதமொன்றை திணைக்களத்திற்கு அனுப்பி விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும். மேலும் பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் தேவையான தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக விண்ணப்பதாரர் தம்மிடம் விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்திற்கான பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் பதிவுத்தபாலில் அனுப்பியமைக்கான பற்றுச்சீட்டு என்பவற்றை வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

(vii) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் விண்ணப்பிப்பார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லையினை கொண்டிருப்பதுடன் விண்ணப்ப முடிவுத்திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக பரீட்சைக்குரிய கட்டணத்தினைச் செலுத்தி அதன் பற்றுச்சீட்டினை இணைத்து பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்தினைக் குறிப்பிட்டு, குறித்த விண்ணப்பதாரி கையொப்பமிட்டு அதனை அத்தாட்சிப்படுத்தி (உரிய பெயரினை திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்தி) விண்ணப்பப்படிவத்தினை முறையாக நிரப்பி அனுப்பி வைக்கும் விண்ணப்பதாரிகளுக்கு மட்டும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படும். குறித்த அனுமதி அட்டையின்றி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

(viii) பரீட்சார்த்திகள் தமக்கு குறித்துரைக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் அனுமதி அட்டையில் பரீட்சைக்கு முன்னரே அவரது கையொப்பத்தை உரிய முறையில் உறுதிப்படுத்திக்கொண்டு அவர் பரீட்சைக்குத்தோற்றும்முதல் நாளிலேயே அதனை மண்டபமேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் இவ்வர்த்தமானியின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். இவற்றை மீறுமிடத்து அவர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்று வதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொண்டதாக கருதப்படமாட்டாது.

10. பரீட்சார்த்திகளின் ஆள் அடையாளம் : தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையும் விதத்தில் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் தனது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். இதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) தேசிய ஆள் அடையாள அட்டை;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அத்துடன் பரீட்சார்த்திகள் அவர்களது அடையாளத்தை உறதி செய்ய தங்கள் முகத்தையோ அல்லது காதுகளையோ மறைக்காது பரீட்சை மண்டபத்தில் நுழைதல் வேண்டும். இவ்விதத்தில் தமது அடையாளத்தை உறுதி செய்ய மறுக்கும் எந்தப் பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தினுள் உட்புக அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை அதிகாரிகளால் அடையாளம் காண்பதற்கு பரீட்சை மண்டபத்தினுள் உட்பிரவேசித்து பரீட்சை முடிந்த பின்னர் மண்டபத்தை விட்டு வெளியேறும் வரையில் அவ்வாறு தங்கள் முகத்தையோ இரு காதுகளையோ மறைக்காது இருத்தல் வேண்டும்.

11. பெறுபேறுகள்.- வர்த்தமானி அறிவித்தலின் 14.1 பந்திக்கமைய தகைமையுடைய விண்ணப்பதாரிகள் பரீட்சையில் சித்தி பெற்ற மொத்த புள்ளிகளின் தேர்ச்சிக்கமைய தயாரிக்கப்பட்ட பெறுபேறுகள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்படும். தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட ரீதியாக அனுப்பி வைக்கப்படும் அல்லது www.results.exams.gov.lk வலைத்தளத்தில் பிரசுரிக்கப்படும்.

12. பொய்யான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை.- பரீட்சார்த்தி ஒருவருக்கு தகைமைகள் இல்லை எனத் தெரியவருமிடத்து, இப்பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் காலத்தில் அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவருடைய பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தியொருவர் ஏதேனும் விடயங்களை அவை பொய்யானவை என்பதை அறிந்த நிலையில் சமர்ப்பித்துள்ளதாகத் தெரியவருமிடத்து அல்லது ஏதேனும் முக்கியமான ஒரு விடயத்தை அவர் வேண்டுமென்றே மறைத்திருப்பாராயின் அவர் சேவையிலிருந்து நீக்கப்பட முடியும்.

13. இவ் ஒழுங்கு விதிகளில் கவனத்திற்கொள்ளப்படாத விடயங்கள் இருப்பின், அவை தொடர்பில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கு உட்பட்டவகையில் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

14. இவ் அறிவித்தலின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களிலான அறிவித்தல்களுக்கிடையில் முரண்பாடுகள் காணப்படுமாயின், சிங்கள மொழியிலான அறிவித்தலின்படி செயற்படுதல் வேண்டும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு.

நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு - 01,
2020, சனவரி 08.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்காக)

## இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2019/2020

## Open Competitive Examination for Recruitment to Grade III of the Sri Lanka Inland Revenue Service - 2019/2020

1.0 மொழி மூலம் :
பரீட்சைக்குத் தோற்றும் மொழி :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

2.0 தனிப்பட்ட தகவல்கள் :

2.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

2.2 முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.
(உதாரணம் : GUNAWARDHANA, H. M. S.K.)

2.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.

2.4 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) (பரீட்சை அனுமதிப்பத்திரம் இந்த முகவரிக்கு தபாலில் அனுப்பப்படும்) :-----.

2.5 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-----.

2.6 பால் : ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

2.7 விவாகமானவர்/விவாகமாகாதவர் : விவாகமாகாதவர் - 1
விவாகமானவர் - 2
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

2.8 இனம் :
(சிங்களவர் - 1, தமிழர் - 2, இந்தியத் தமிழர் - 3,
முஸ்லிம் - 4, ஏனையோர் - 5)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக)

2.9 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

2.10 பிறந்த திகதி : ஆண்டு : மாதம் : திகதி :

2.11 தகைமைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டிய 2020.04.06 ஆந் திகதியில் வயது :

வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

2.12 தொலைபேசி இலக்கம் :

3.0 கல்வித் தகைமைகள் :

(i) பட்டம்/தொழில் சார்ந்த தகைமைகளைப் பெற்ற திகதி :-----.
(ii) பல்கலைக்கழகம்/நிறுவனம் :-----.
(iii) பதிவு இலக்கம் :-----.
(iv) வெளிவாரியான/உள்ளக :-----.
(v) பட்டம்/தொழிற் தகைமை :-----.
(vi) பாடங்கள்/துறை :-----.
(vii) வகுப்பு :-----.
(viii) மேல்/கீழ் :-----.
(ix) பரீட்சை சுட்டெண் :-----.
(x) பரீட்சைக்குத் தோற்றிய ஊடக மொழி :-----.

4.0 அரசாங்க சேவையில் மாகாண அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் :

(i) தற்போது வகிக்கும் பதவி அல்லது சேவை :-----.
(ii) தரம் :-----.
(iii) அப்பதவியில் இணைந்த திகதி :-----.
(iv) பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி :-----.
(v) சேவைக்காலம் :-----.

5.0 பணம் செலுத்திய பற்றுச்சீட்டை உரிய விதத்தில் ஒட்டுக.

பணம் செலுத்திய பற்றுச்சீட்டை உரிய விதத்தில் ஒட்டுக.
(விண்ணப்பதாரரிடம் பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றை வைத்திருப்பது உகந்ததாகும்.)

6.0 விண்ணப்பதாரரின் உறுதியுரை :

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு உட்பட்ட வகையில் உண்மையானவை என்றும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட .................. ஆந் திகதிய ........... ஆம் இலக்கப் பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது என்பதையும் வெளிப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சை விதிமுறைகளுக்கு இணங்கச் செயற்படுவதற்கும், இந்தப் பரீட்சையின் நிபந்தனைகளுக்கு இணங்க நான் தகுதியற்றவன் எனத் தெரியவருமிடத்து, பரீட்சைக்கு முன்னர் அல்லது நடைபெறுகின்ற போது அல்லது அதன் பின்னர் எனது பரீட்சார்த்தி உரிமையை இரத்துச் செய்வதற்கு எடுக்கப்படும் எந்தவொரு தீர்மானத்திற்கும் உடன்படுகின்றேன். மேலும் பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு நடப்பேன் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

------,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

7.0 விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் (வர்த்தமானி அறிவித்தல் 8 (ஈ) இணங்கியதாக இருத்தல் வேண்டும்.)

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் .............................. (முழுப்பெயர்) என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்றும், அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்றும், ................. ஆந் திகதி அவர் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

-------------,
(கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்)

திகதி :----.

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப் பெயர் :-----.
பதவிப்பெயர்:-----.
முகவரி :-----.
(உத்தியோகபூர்வ முத்திரை மூலம் உறுதிப்படுத்துவது அசியமாகும்.)

8.0 நிறுவனத் தலைவரின் சான்றுப்படுத்தல் (அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்) :

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ............................. (முழுப்பெயர்) என்பவர் இவ் அமைச்சில்/ திணைக்களத்தில் ............................ சேவையின் தரம் ............... இல் நிரந்தரப் பதவியொன்றில் சேவையாற்றுகின்றார் என்றும், அவர் எந்தவொரு ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாக்கப்பட்டவராக இல்லை என்றும், இப்பதவிக்காகத் தெரிவு செய்யப்பட்டால் இந்த நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிக்க முடியுமென்றும் உறுதிப்படுத்துவதுடன் அவருடைய விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன்.

------------,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

கையொப்பத்தை சான்றுப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப் பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
(உத்தியோகபூர்வ முத்திரை மூலம் உறுதிப்படுத்துவது அவசியமாகும்.)
திகதி :----.

03-32

## தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளர்கள் மற்றும் புள்ளிவிபரவியலாளர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2014 (2020)

## First Efficiency Bar Examination for Senior Statisticians and Statisticians of the Department of Census and Statistics - 2014 (2020)

1. சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளர்கள்/புள்ளிவிபரவியலாளர் பதவிக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை ஒன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் 2020, யூன் மாதத்தில் நடாத்தப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. (i) இப்பரீட்சை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சையை நடாத்துதல், பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக அவரால் விதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறு வெளியிடல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

(ii) பரீட்சார்த்திகளுக்கான விதிமுறைகள், வர்த்த மானியில் பிரத்தியேகமாக அச்சிடப்பட்டுள்ளது. இவ்விதிமுறைகளை மீறுமிடத்து, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

3. **பரீட்சைக் கட்டணம்.-** பரீட்சைக்குரிய பாடங்களில் ஒரே தடவையாகவோ அல்லது வெவ்வேறு தடவைகளிலோ தோற்ற முடியும். இவ்வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கு முதல் தடவையாக தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. அதன் பின்னர் தோற்றும் ஒவ்வொரு தடவையும் ஒரு பாடம் பொருட்டு ரூபா 600.00 உம், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்கள் அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தோற்றுவதாயின் ரூபா 1,200.00 உம் பரீட்சைக் கட்டணமாக அறவிடப்படும். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு வரவு வைக்கும் வகையில் நாட்டின் எந்த ஒரு தபால்/உப தபால் நிலையத்தில் அல்லது ஏதேனும் மாவட்ட/பிரதேச செயலகத்தில் பணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் குறித்தொதுக்கப்பட்ட பகுதியில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். இந்தப் பரீட்சைக் கட்டணத்துக்கு மேலதிகமாக வேறு எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது எனவும் அறிவிக்கிறேன். பரீட்சைக் கட்டணம் பொருட்டு காசுக்கட்டளையோ அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட பணம் எக்காரணம் கொண்டும் திருப்பிச் செலுத்தப்படவோ அல்லது வேறொரு பரீட்சைக்காக மாற்றப்படவோ மாட்டாது. (பற்றுச்சீட்டின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.)

4. **விண்ணப்பப்படிவம்.-** விண்ணப்பப்படிவம் இங்கு இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய இருத்தல் வேண்டும். இவ்விண்ணப்பப்படிவம் ஏ4 தாளில் இரு பக்கங்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்படுவதுடன் தலைப்பு இல. 1 இலிருந்து 4 வரை முதலாம் பக்கத்திலும் ஏனையவை இரண்டாம் பக்கத்திலும் இருக்கும் வண்ணம் தயாரிக்கப்படுதலும் வேண்டும். விண்ணப்பம் தயாரிக்கும்போது தலைப்பில் குறிப்பிட்ட பரீட்சையின் பெயரை சிங்கள பரீட்சார்த்திகள் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் பரீட்சார்த்திகள் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பம் தட்டச்சிடப்பட்டு தயாரிக்க இயலுமாயினும் அதனைச் சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரியின் கையெழுத்தால் பூரணப்படுத்துதல் வேண்டும். அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பரீட்சார்த்திகளால் திணைக்களத் தலைவரின் ஊடாக 2020.04.03 ஆந் திகதிக்கு முன் கிடைக்குமாறு, "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்புக் (நிறுவனம் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், தபால் பெட்டி இல. 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். பூரணமற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்கள் மற்றும் கையேற்கும் இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலும், பூர்த்திசெய்த விண்ணப்பம், பரீட்சை அறிவித்தலில் குறிப்பிட்ட மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டதா என்பதையும் விண்ணப்பதாரிகள் சரிபார்த்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படும். (பூர்த்திசெய்த விண்ணப்பத்தின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.)

5. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்.-** பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தில் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலையப் பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளரால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான வெளிநாட்டுக் கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

அத்துடன் பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ஏற்ற வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் நுழைய வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தலை மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்த நேரம் முதல் பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகள் விண்ணப்பதாரரை இனங்காணுவதற்கு ஏற்ற வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காது இருத்தல் வேண்டும்.

6. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடையவர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளார்கள் எனும் எடுகோளின் பேரில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியிருப்பின் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்கு ஏற்புடைய பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம், விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் கையொப்பத்தை உறுதிப்படுத்தல், திணைக்களத் தலைவரின் சான்றுரை என்பன சகிதம் சரியாக நிரப்பி அனுப்பிய பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை வழங்கப்படும். பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அதுபற்றிய அறிவித்தல் செய்தித்தாள்களிலும் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளத்திலும் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிட்டு 2 அல்லது 3 தினங்களின் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவித்தலில் குறிப்பிட்டவாறு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அங்கு விண்ணப்பதாரரின் முழுப்பெயர், முகவரி, தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயர் ஆகியவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு விசாரிக்கும்போது விண்ணப்பதாரர் தம்வசம் வைத்திருந்த விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதி, விண்ணப்பத்தைப் பதிவுசெய்த பற்றுச்சீட்டு என்பவற்றை கைவசம் வைத்திருத்தல் முக்கியமானது. கொழும்புக்கு வெளியேயுள்ள பிரதேசமாயின் அனுமதி அட்டையை பெறுவதற்கான தொலைநகல் இலக்கத்துடன் மேற்குறிப்பிட்ட தகவல்களும் குறிப்பிடப்பட்ட வேண்டுகோள் கடிதத்தை தொலைநகல் மூலம் பரீட்சைகள் திணைக்களத்துக்கு அறிவிப்பதன் மூலம் விசாரிப்பது ஏற்றதாகும்.

7. பரீட்சைக்கான அனுமதி அட்டையில் பரீட்சார்த்தியின் கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அது, நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரைக் கொண்டு அல்லது அரச பாடசாலையொன்றின் அதிபர், ஓய்வுபெற்ற அலுவலர், பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, நொத்தாரிசு, முப்படைகளின் ஆணைபெற்ற அலுவலர், அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையின் நிரந்தரப் பதவிநிலை அலுவலர் அல்லது பௌத்த விகாரை அதிபதிகள் அல்லது நாயக்க தேரர் அல்லது ஏனைய வழிபாட்டுத் தலங்களுக்குப் பொறுப்பான அல்லது மத குருக்களில் உயர்ந்த நிலையிலுள்ள ஒருவரைக் கொண்டு சான்றுப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். அத்துடன் பரீட்சைக்குத் தோற்றிய முதல் நாளிலேயே பரீட்சை நிலையப் பொறுப்பாளரிடம் தனது கையொப்பத்தை சான்றுப்படுத்திய அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

8. இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் வெளியிடப்பட்ட அனுமதி அட்டையுடனான உத்தியோகத்தர்களுக்கு முதல் முறையாக பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்களுக்கு திணைக்களத் தலைவரினால் கடமை விடுமுறை வழங்கப்படுதல் வேண்டும். பிரயாணக் கட்டணம் வழங்கப்படமாட்டாது. தமக்கு உரிய பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டியதுடன் தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்காத பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

9. பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கில மொழி மூலங்களில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலமாக, போட்டிப் பரீட்சை ஒன்றின் ஊடாக சேவையில் இணைந்தவராயின் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலத்தையும் போட்டிப் பரீட்சையின்றி அரசாங்க சேவையில் இணைந்தவராயின் அரசாங்க சேவையில் இணைவதற்கு ஏற்புடைய பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலத்தையும் மொழி மூலமாகத் தெரிவுசெய்தல் வேண்டும். பரீட்சைக்குரிய சகல பாடங்களிற்கும் ஒரே மொழி மூலத்தைப் பயன்படுத்துதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பித்த மொழிமூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

10. இப்பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடைபெறும்.

11. **பரீட்சைப் பாடத்திட்டம்.**- மேற்படி பதவிக்கு உரிய பரீட்சை, கீழ்க்குறிப்பிட்ட பாடங்களை உள்ளடக்கும் :

| பாடம் | காலம் | புள்ளிகள் | சித்திப் புள்ளி |
|---|---|---|---|
| 1. நிர்வாகம் | 2 மணி. | 100 | 40% |
| 2. அரசாங்க துறை நிதி முகாமைத்துவம் | 2 மணி. | 100 | 40% |
| 3. ஆங்கிலம் | 2 மணி. | 100 | 40% |
| 4. பிரயோகப் புள்ளி விபரங்கள் | 3 மணி. | 100 | 40% |

(1) ***நிர்வாகம்*** - (பாட இல. 1) :
பகுதி I - நிர்வாகம்
பகுதி II - அலுவலக, வெளிக்கள நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல் மற்றும் ஒழுங்கமைப்பு முறைகள்
அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் மற்றும் தாபன விதிக்கோவையின் பின்வரும் அதிகாரங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்படும். VI, VII, IX, XI, XII, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII மற்றும் XLVIII

- வினாத்தாளின் கட்டமைப்பு :-
  - (a) ஒரு பகுதிக்கு நான்கு வினாக்கள் வீதம் வினாத்தாள், இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. வினாக்கள் கட்டமைக்கப்பட்ட, பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட மற்றும் கட்டுரை வடிவில் இருக்கும்.
  - (b) I, II பகுதிகளில் குறைந்தபட்சம் இரண்டு வினாக்கள் வீதம் தெரிவுசெய்து ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளித்தல் வேண்டும்.
  - (c) ஒவ்வொரு வினாவுக்கும் சம புள்ளிகள் வழங்கப்படும்.

(2) ***அரசாங்க துறை நிதி முகாமைத்துவம்*** (பாட இல. 2) நிதி ஒழுங்குவிதிகள் கீழ்க்காட்டப்பட்ட அதிகாரங்கள்:

I - சகல பிரிவுகளும்
II - சகல பிரிவுகளும்
III - சகல பிரிவுகளும்
IV - சகல பிரிவுகளும்
V - 1, 2, 3, 4 ஆம் பிரிவுகள்
VI - சகல பிரிவுகளும்
VII - 1, 2, 3, 4 மற்றும் 6 பிரிவுகள்

- வினாத்தாளின் கட்டமைப்பு :-
  - (a) வினாத்தாள் கட்டுரை ரீதியிலான ஆறு வினாக்களை கொண்டுள்ளது. வினாக்கள் கட்டமைக்கப்பட்ட, பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட மற்றும் கட்டுரை வடிவில் இருக்கும்.
  - (b) ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளித்தல் வேண்டும்.
  - (c) ஒவ்வொரு வினாவுக்கும் சம புள்ளிகள் வழங்கப்படும்.

(3) ***ஆங்கிலம்*** (பாட இல. 03)

**English Grammar :**

A suitable level of proficiency on the following forms of grammar in the spoken the written language is expected from the candidate.

- Tense and Number
- Sentences (Simple/Compound/ Complex/Compound Complex)
- Relative Clauses
- Reported Speech
- Adjectives and Adverbs
- Determiners
- Prepositions

**Writing Skills** :

The Knowledge on the modern formats and styles of writing is tested in this area of study.

- Internal modes of Communication
- Formal Correspondences skills
- Writing Descriptions/Explanations
- Summary Writing skills
- Report Writing skills
- Meeting Minutes/Agendas/Invitations
- Comprehension

**Reading Skills** :

Candidate's ability to comprehend a printed text; infer meaning and verbal/written interpretation is expected.

* Reading and understanding the specific and general meaning of the printed text.
* Reading and interpretation (Verbal/Written)
* Understanding the Cohesion and coherence of a passage.

- வினாத்தாளின் கட்டமைப்பு :-

(a) வினாத்தாள் பின்வரும் விடயங்கள் சம்பந்தப்பட்ட வினாக்களை கொண்டுள்ளது.

I. இலக்கணம்
II. கிரகித்தல்
III. மரபுத்தொடர்
IV. கட்டுரை

(b) சகல வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

(4) ***பிரயோகப் புள்ளிவிபரம்*** - (பாட இல. 4).- தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் கைத்தொழில், விவசாயப் புள்ளிவிபரங்கள், தேசிய கணக்குகள், தகவல் தொழில்நுட்பம் (தரவு வகைப்படுத்தல்), மாதிரி அளவீடுகள், குடிசனத் தொகை மதிப்பு மற்றும் மக்களியல் விலைச் சுட்டெண்கள், வரைபடங்கள் போன்ற பிரிவுகளின் ஊடாக மேற்கொள்ளப்படும் புள்ளிவிபர வேலைகள் சம்பந்தமாக இயைபுடைய உத்தியோகத்தர்களின் அறிவை மதிப்பிடும் பொருட்டு தயாரிக்கப்படும் வினாத்தாளாகும்.

- வினாத்தாளின் கட்டமைப்பு :-

(a) வினாத்தாள் கட்டுரை ரீதியிலான எட்டு வினாக்களை கொண்டுள்ளது. வினாக்கள் கட்டமைக்கப்பட்ட, பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட மற்றும் கட்டுரை வடிவில் இருக்கும்.

(b) ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளித்தல் வேண்டும்.

11.1 உத்தியோகத்தர்கள் சித்தி எய்துவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் ஆகக்குறைந்தது 40% புள்ளிகள் அல்லது அதற்கு மேல் எடுத்தல் வேண்டும் என்பதுடன் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தி எய்துவதற்கு சகல பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும். பரீட்சைக்குரிய பாடங்களை ஒரே தடவையில் அல்லது சில தடவைகளில் பூர்த்திசெய்வதற்கு விண்ணப்பதாரர்களுக்கு வசதியுண்டு.

12. பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குதல், அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமையுள்ளவர் எனக் கருதப்பட முடியாது.

13. இவ்வர்த்தமானி அறிவித்தலில் கூறப்பட்ட ஏற்பாடுகள் இன்றி வேறு ஏதேனும் விடயங்கள் தொடர்பில் தொகைமதிப்பு புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

14. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கிலப் பதிப்புகளில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் சிங்களப் பதிப்பில் குறிப்பிட்ட விடயங்களே அதிகாரபூர்வமானவையாகும்.

பணிப்பாளர் நாயகம்

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்,
'சங்கியான மந்திரய',
இல. 306/71, பொல்தூவ வீதி,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளர்கள் மற்றும் புள்ளிவிபரவியலாளர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2014 (2020)**

First Efficiency Bar Examination for Senior Statisticians and Statisticians of the Department of Census and Statistics - 2014 (2020)

(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

1.1 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.
(உதாரணம்- HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதிப் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதல் எழுத்துக்களை இறுதியிலும் இட்டு பெயர் :----.
(உதாரணம்- GUNAWARDHANA, H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (தமிழில்/ சிங்களத்தில்) :----.

2. அலுவலகத்தின் பெயரும் முகவரியும் :

2.1 அலுவலகத்தின் பெயர் : ----.

2.2 அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) : ----.
(இம்முகவரிக்கு அனுமதி அட்டை அஞ்சலிலிடப்படும்)

3. 3.1 ஆண்/ பெண் பிரிவு :
ஆண்-0
பெண்-1
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

3.2 தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

3.3 பிறந்த திகதி :
ஆண்டு : மாதம் : திகதி :

3.4 கையடக்கத் தொலைபேசி இலக்கம்:

4. நீங்கள் தோற்றவுள்ள வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சைக்குரிய பாடம்/ பாடங்கள் :
(வர்த்தமானி அறிவித்தலின் 10 ஆவது பந்தியைப் பார்க்கவும்)

| தொடர் இலக்கம் | பாடம் | பாட இலக்கம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

5. தற்போது வகிக்கும் பதவி :----.

5.1 நியமனக் கடித இலக்கம் :----.

5.2 நியமனத் திகதி :----.

6. நீங்கள் பரீட்சைக்கு முதற்தடவையாகவா தோற்றுகிறீர்கள் ? : ----.
   6.1 முதற் தடவையல்லாவிடின் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் :----.
   6.2 பற்றுச்சீட்டு இல. :----.
   6.3 திகதி :----.

| |
|---|
| பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும். (ஏற்புடையதாயின் மட்டும்)<br>(பற்றுச்சீட்டின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.) |

மேற்குறிப்பிட்ட விபரங்கள் சரியானவை எனவும் மேற்குறிப்பிட்ட மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர் எனவும் தெரிவித்துக்கொள்வதுடன் இப்பரீட்சையை நடத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு அமைந்தொழுக உடன்படுகின்றேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**கையொப்பத்தை சான்றுப்படுத்தல்**

திரு./ திருமதி/ செல்வி .............................................. எனது திணைக்களத்தில் சேவையாற்றுகிறார் என்றும் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் .............................................. ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்றும், குறித்த பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
சான்றுப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(பதவி முத்திரையால் உறுதிப்படுத்தவும்.)

**திணைக்களத் தலைவரின் சான்றுரை**

(1) மேலே வழங்கப்பட்ட விபரங்கள் சரிபார்க்கப்பட்டதென்றும்,
(2) உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர் என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
அலுவலக முத்திரையும்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

*03-411*

## தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் II இற்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2013(2020)

## First Efficiency Bar Examination for Grade II Statistical Officers in the Department of Census and Statistics - 2013(2020)

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபர உத்தியோகத்தர் பதவிக்குரிய அலுவலர்கள் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் II பதவிக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் 2020, யூன் மாதத்தில் நடாத்தப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. (i) இப்பரீட்சை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடத்தப்படுவதுடன் பரீட்சையை நடாத்துதல், பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக அவரால் விதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்குப் பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறு வெளியிடல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

(ii) பரீட்சார்த்திகளுக்கான விதிமுறைகள், வர்த்தமானியில் பிரத்தியேகமாக அச்சிடப்பட்டுள்ளது. இவ்விதிமுறைகளை மீறுமிடத்து, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

3. **பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக்குரிய பாடங்கள் பொருட்டு ஒரே தடவையில் அல்லது தனித்தனியாக தோற்ற முடியும். முழுமையாக அல்லது ஒரு பாடத்திற்கு முதல் தடவையாக தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. அதன் பின்னர் தோற்றும் ஒவ்வொரு தடவையும் ஒரு பாடத்துக்கு 250 ரூபாவும், மொத்தப் பாடங்கள் பொருட்டு 500 ரூபாவும் பரீட்சைக் கட்டணமாக அறவிடப்படும். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு வரவு வைக்கும் வகையில் நாட்டின் எந்த ஒரு தபால்/ உப தபால் அலுவலகத்தில் அல்லது மாவட்டச்/பிரதேச செயலகத்திற்கு செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய பகுதியில் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும். இந்தப் பரீட்சைக் கட்டணத்துக்கு மேலதிகமாக எவ்விதக் கட்டணமும் அறவிடப்படமாட்டாது. (பற்றுச்சீட்டின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.) பரீட்சைக் கட்டணத்தின் பொருட்டு காசுக் கட்டளை அல்லது முத்திரை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன், செலுத்தப்பட்ட பணம் எந்தவொரு காரணத்திற்காகவும் மீளச் செலுத்தப்படவோ அல்லது வேறு பரீட்சையின் பொருட்டு மாற்றப்படவோ மாட்டாது.

4. **விண்ணப்பப்படிவம்.**- விண்ணப்பப்படிவம் இங்கு இணைக்கப்பட்டுள்ள மாதிரிக்கு அமைய இருத்தல் வேண்டும். இவ் விண்ணப்பப்படிவம் ஏ4 தாளின் இரு பக்கத்தையும் பயன்படுத்தித் தயாரிக்கப்படுவதுடன் தலைப்பு இல. 1 இலிருந்து 5 வரை முதலாம் பக்கத்திலும் ஏனையவை இரண்டாம் பக்கத்திலும் அமையும் வண்ணம் தயாரிக்கப்படுதலும் வேண்டும். விண்ணப்பம் தயாரிக்கும்போது தலைப்பில் குறிப்பிட்ட பரீட்சையின் பெயரை சிங்கள பரீட்சார்த்திகள் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் பரீட்சார்த்திகள் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் தட்டச்சிடப்பட்டு தயாரிக்கப்பட இயலுமாயினும் அதனைச் சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரியின் கையெழுத்தால் பூரணப்படுத்துதல் வேண்டும். அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பரீட்சார்த்திகளால் திணைக்கள தலைவர் ஊடாக, 2020, ஏப்பிறல் மாதம் 03 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு, "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்புக் (நிறுவனம்சார் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இலக்கம் 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் வைத்தனுப்பும் கடிதம் உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். பூரணமற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்களும் கையேற்கும் இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். மேலும் பூர்த்திசெய்த விண்ணப்பப் படிவம், பரீட்சை அறிவித்தலில் குறிப்பிட்ட மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும் விண்ணப்பதாரிகள் சரிபார்த்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படும். (பூர்த்திசெய்த விண்ணப்பப் படிவத்தின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.)

5. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்.**- பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தில் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலையப் பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

அத்துடன் பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ஏற்ற வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் நுழைய வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தலை மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்த நேரம் முதல் பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகள் விண்ணப்பதாரரை இனங்காணுவதற்கு ஏற்ற வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காது இருத்தல் வேண்டும்.

6. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளை பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளார்கள் எனும் எடுகோளின் பேரில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட வயதெல்லையினுள், விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நேர அட்டவணை பிரதியுடன் அனுமதி அட்டையும் வழங்கப்படும். அனுமதி அட்டையின்றி பரீட்சையில் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டையின்றி பரீட்சையில் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டவுடன் அதுபற்றிய அறிவித்தல் செய்தித்தாள்களிலும் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிட்டு 2 அல்லது 3 தினங்களின் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அதுபற்றி அறிவித்தலில் குறிப்பிட்ட தொலைபேசி இலக்கங்கள் மூலம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அதன்போது விண்ணப்பதாரரின் முழுப்பெயர், முகவரி, தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயர் என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு விசாரிக்கும்போது விண்ணப்பதாரர் தம்வசம் வைத்திருந்த விண்ணப்பப்படிவத்தின் பிரதியையும், பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியையும், தபால் கந்தோரில் பதிவுசெய்த பற்றுச்சீட்டையும் கைவசம் வைத்திருத்தல் முக்கியமானதாகும். கொழும்புக்கு வெளியேயுள்ள பிரதேசமாயின் அனுமதி அட்டையின் பிரதியொன்றை அனுப்புவதற்கான தொலைநகல் இலக்கத்துடன் மேற்குறிப்பிட்ட தகவல்களையும் குறிப்பிட்டு தங்களின் வேண்டுகோள் கடிதத்தை தொலைநகல் மூலம் பரீட்சைகள் திணைக்களத்துக்கு அனுப்பி விசாரித்தலும் மிகப் பொருத்தமானதாகும்.

6.1 பரீட்சைக்கு, விண்ணப்பிக்கும் போது காணப்பட்ட பரீட்சார்த்தியின் பதவி, சேவை நிலையம் என்பன பரீட்சை சம்பந்தமான சகல நடவடிக்கைகளுக்கும் ஏற்புடையன என்பதுடன், விண்ணப்பம் அனுப்பப்பட்டதன் பின்னர் அது தொடர்பில் இடம்பெறும் மாற்றங்கள் எதுவும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

6.2 பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரைக் கொண்டு உறுதிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

6.3 பரீட்சைக்குத் தோற்றும் முதல் தினத்திலேயே தனது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்ட அனுமதி அட்டையை பரீட்சை நிலையப் பொறுப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

7. இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட அனுமதி அட்டையுடன் முதல் முறையாக பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏற்ற வகையில் திணைக்களத் தலைவரினால் கடமை லீவு வழங்கப்படுதல் வேண்டும். பிரயாணக் கட்டணம் வழங்கப்படமாட்டாது.

8. இப்பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கில மொழி மூலங்களில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலமாக, போட்டிப் பரீட்சை ஒன்றின் ஊடாக சேவையில் இணைந்தவராயின் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மொழியையும் போட்டிப் பரீட்சையின்றி அரசாங்க சேவையில் இணைந்தவராயின் அரசாங்க சேவையில் இணைவதற்கு ஏற்புடைய பரீட்சைக்குத் தோற்றிய மொழியையும் மொழி மூலமாகத் தெரிவுசெய்தல் வேண்டும். பரீட்சைக்குரிய சகல பாடங்களிற்கும் ஒரே மொழி மூலத்தைப் பயன்படுத்துதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பித்த மொழிமூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

9. இப்பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடைபெறும்.

10. **பரீட்சைப் பாடத்திட்டம்**.- மேற்படி பதவிக்கு உரிய பரீட்சைகள் கீழ்க்குறிப்பிட்ட பாடங்களை உள்ளடக்கும் :

| வினாப்பத்திரம் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. அடிப்படைப் புள்ளிவிபர முறைகள் | 2 மணி. | 100 | 40% |
| 2. அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும் | 2 மணி. | 100 | 40% |
| 3. நிதி ஒழுங்குவிதிகள் | 2 மணி. | 100 | 40% |

| | வினாப்பத்திரம் | பாடத்திட்டம் |
|---|---|---|
| 1 | அடிப்படைப் புள்ளிவிபர முறைகள் | தரவு சேகரித்தல், சமர்ப்பித்தல், t பரம்பல், சாதாரண பரம்பல், t கருதுகோட் சோதனைக் கோட்பாடுகளும் $X^2$ சோதனையும், இழைவரையம் மற்றும் மீடிறன் வளையி, மத்திய சார்பும், பிரிகை அளவுகளும் (ஆதாரம், இடையம், இடை), மாறற்றிறன், காலணை, நியம விலகல், மாதிரியெடு நுட்பத் தத்துவங்கள், மாதிரியெடு அளவீடு, மாதிரியெடுப்பு வலு, மாதிரியெடுப்பல்லா வலு, சுட்டெண்கள், எளிய இணைபு, ஏகபரிமாணப் பிற்செலவு, அடிப்படைப் புள்ளிவிபர அறிவு<br><br>**வினாப் பத்திரத்தின் கட்டமைப்பு**<br>(a) வினாப்பத்திரம் கட்டமைக்கப்பட்ட கட்டுரை/ கட்டுரை வடிவிலான 04 வினாக்களை கொண்டுள்ளது.<br>(b) எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். |
| 2 | அலுவலக நிர்வாகமும் தாபன விதிக் கோவையும் | இதன் பொருட்டு தாபன விதிக் கோவையின் II, III, IV, V, VIII, XII, XIII, XIV, XIX ஆகிய அதிகாரங்களையும் அவ்வதிகாரங்கள் மீதும் திருத்தஞ் செய்யப்பட்ட சுற்றறிக் கைகள் மீதும் கவனம் செலுத்தவும்.<br><br>**வினாப் பத்திரத்தின் கட்டமைப்பு**<br>(a) வினாப்பத்திரம் கட்டமைக்கப்பட்ட கட்டுரை/ கட்டுரை வடிவிலான 05 வினாக்களை கொண்டுள்ளது.<br>(b) எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். |
| 3 | நிதி ஒழுங்கு விதிகள் | இது நிதி ஒழுங்கு விதிகளின்கீழ் குறிப்பிடப்பட்ட அதிகாரங்களை உள்ளடக்கும் :-<br><br>* I ஆம் அதிகாரம்.- வருமான செலவின மதிப்பீடு, திரட்டிய நிதியம், வருடாந்த மதிப்பீடு, வருடாந்த மதிப்பீட்டை மாற்றுதல் (நி. ஒ. 1-68 வரை)<br><br>* III ஆம் அத்தியாயம்.- நிதி முகாமையும் பொறுப்புடைமையும், பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர்கள், கணக்கீட்டு உத்தியோகத் தர்கள்,வருமானக்கணக்குஉத்தியோகத்தர்களின் கொடுப்பனவுகளுக்கு அதிகாரம் வழங்குதல், அங்கீகாரமளித்தல், சான்றுபடுத்தல், வேலை களைக் குறித்தொதுக்குதல் (நி. ஒ. 124-147 வரை)<br>**வினாப் பத்திரத்தின் கட்டமைப்பு**<br>(a) வினாப்பத்திரம் கட்டமைக்கப்பட்ட கட்டுரை/ கட்டுரை வடிவிலான 05 வினாக்களை கொண்டுள்ளது.<br>(b) எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். |

**குறிப்பு**.-

* மேற்படி பாடங்களுக்கு தனித்தனியாகவும் தோற்ற முடியும்.

* குறித்த காலத்தில் பரீட்சையில் சித்தியடையாமை அதன் பின்னரான வேதன ஆண்டேற்றத்தை பிற்போடுவதற்கு ஏதுவாகலாம்.

11. பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுதலானது, அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமையுள்ளவர் எனக் கருதுதலாகாது.

12. பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சை அபேட்சகர்கள் கட்டுப்படுதல் வேண்டும். குறித்த சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாக அவருக்கு நேரிடும்.

13. பரீட்சையில் சித்தியடையும் பொருட்டு ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் பெறவேண்டிய ஆகக்குறைந்த புள்ளி அளவு 40% ஆகும். பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளின் புள்ளிகள் அடங்கிய ஆவணமொன்ற பணிப்பாளர் நாயகம், தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்திற்கு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும். பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், பெறுபேறுகளை பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரிகளுக்கு தனிப்பட்ட ரீதியில் அறிவிக்கமாட்டார். பரீட்சைக்குரிய பாடங்களை ஒரே தடவையில் அல்லது சில தடவைகளில் பூர்த்திசெய்வதற்கு விண்ணப்பதாரிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

14. இவ்வர்த்தமானி அறிவித்தலில் கூறப்பட்ட ஏற்பாடுகள் தவிர்ந்த வேறு ஏதேனும் விடயம் தொடர்பில் தொகைமதிப்பு புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

15. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கிலப் பதிப்புகளில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் சிங்களப் பதிப்பில் குறிப்பிட்ட விடயங்களே உத்தியோகபூர்வமானவையாகும்.

பணிப்பாளர் நாயகம்,
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்,
"சங்கியான மந்திரய",
இல. 306/71, பொல்தூவ வீதி,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் II இற்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2013 (2020)**

First Efficiency Bar Examination for Grade II Statistical Officers in the Department of Census and Statistics - 2013 (2020)

(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

01. 1.1 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
(உ-ம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதிப் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களை இறுதியிலும் இட்டு பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
(உ-ம் : GUNAWARDHANA, H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (தமிழில்/சிங்களத்தில்) :----.

02. 2.1 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
(அனுமதி அட்டை இந்த முகவரிக்கு தபாலில் அனுப்பப்படும்.)

2.2 அலுவலகத்தின் /திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (தமிழில்/சிங்களத்தில்) : ----.

2.3 தனிப்பட்ட முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

2.4 கையடக்க தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

நிலையான தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

03. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

04. பால் (ஆண்/பெண்) :
ஆண் - 0
பெண் - 1 ☐

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

05. நீங்கள் இம்முறை தோற்றவுள்ள பாடம்/பாடங்கள் :

| தொடர் இலக்கம் | பாடம் | பாட இலக்கம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

06. பிறந்த திகதி :

வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

07. தற்போது வகிக்கும் பதவி :

7.1 பதவி :----.

7.2 நியமனக் கடித இலக்கம் :----.

08. 8.1 நீங்கள் பரீட்சைக்கு முதற் தடவையாகவா தோற்றுகிறீர்கள் ? :----.

8.2 முதற் தடவையல்லாவிடின் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் :----.

8.3 பற்றுச்சீட்டு இல. :----.

8.4 திகதி :----.

பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும். (ஏற்புடையதாயின் மட்டும்)
(பற்றுச்சீட்டின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.)

*09.* **விண்ணப்பதாரரின் வெளிப்படுத்துகை :**

மேற்குறிப்பிட்ட விபரங்கள் சரியானதென்றும் மேற்குறிப்பிட்ட மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவரென்றும் பரீட்சைக் கட்டணம் ரூபா ............................. செலுத்திப்பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளதென்றும் தெரிவித்துக்கொள்வதுடன் இப்பரீட்சையை நடத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப அமைந்தொழுக உடன்படுகின்றேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- தமது திணைக்களத் தலைவர் அல்லது திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் முன்னிலையில் பரீட்சார்த்தி கையொப்பமிடுதல் வேண்டும்.

*10.* **கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

திரு./ திருமதி/ செல்வி ............................................... எனது திணைக்களத்தில் சேவையாற்றுகிறார் என்றும் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் .................................................... ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
அலுவலரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்.)

*11.* **திணைக்களத் தலைவரின் சான்றுரை :**

(1) மேலே வழங்கப்பட்ட விபரங்கள் சரி பார்க்கப்பட்ட தென்றும்,
(2) உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர் என்றும் சான்றுப்படுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

*03-412/1*

## தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் I இற்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2014 (2020)

## Second Efficiency Bar Examination for Grade I Statistical Officers in the Department of Census and Statistics - 2014(2020)

01. தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபர உத்தியோகத்தர் பதவிக்குரிய அலுவலர்கள் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் I பதவிக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் 2020, யூன் மாதத்தில் நடாத்தப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

02. (i) இப்பரீட்சை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப் படுவதுடன் பரீட்சையை நடாத்துதல், பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக அவரால் விதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். பரீட்சை நடத்துதல் மற்றும் பெறுபேறு வெளியிடல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

(ii) பரீட்சார்த்திகளுக்கான விதிமுறைகள், வர்த்தமானியில் பிரத்தியேகமாக அச்சிடப்பட்டுள்ளது. இவ்விதிமுறைகளை மீறுமிடத்து, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

03. **பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக்குரிய பாடங்கள் பொருட்டு ஒரே தடவையில் அல்லது வெவ்வேறான இரு தடவைகளில் தோற்ற முடியும். முழுமையாக அல்லது ஒரு பாடத்திற்கு முதல் தடவையாக தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. அதன் பின்னர் தோற்றும் ஒவ்வொரு தடவையும் ஒரு பாடத்துக்கு 250 ரூபாவும், மொத்தப் பாடங்கள் பொருட்டு 500 ரூபாவும் பரீட்சைக் கட்டணமாக அறவிடப்படும். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு வரவு வைக்கும் வகையில் நாட்டின் எந்த ஒரு தபால்/உப தபால் அலுவலகத்திற்கு அல்லது மாவட்டச்/பிரதேசச் செயலகத்திற்கு பணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய பகுதியில் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும். இந்தப் பரீட்சைக் கட்டணத்துக்கு மேலதிகமாக எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது. (பற்றுச்சீட்டின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.) பரீட்சைக் கட்டணத்தின் பொருட்டு காசுக் கட்டளையோ அல்லது முத்திரையோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன், செலுத்தப்பட்ட பணம் எந்தவொரு காரணத்திற்காகவும் மீளச் செலுத்தப்படவோ அல்லது வேறு பரீட்சையின் பொருட்டு மாற்றப்படவோ முடியாது.

04. **விண்ணப்பப்படிவம்.**- விண்ணப்பப்படிவம் இங்கு இணைக்கப்பட்டுள்ள மாதிரிக்கு அமைய இருத்தல் வேண்டும். இவ்விண்ணப்பப்படிவம் ஏ4 தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தித் தயாரிக்கப்படுவதுடன் தலைப்பு இல. 01 இலிருந்து 05 வரை முதலாம் பக்கத்திலும் ஏனையவை இரண்டாம் பக்கத்திலும் அமையும் வண்ணம் தயாரிக்கப்படுதலும் வேண்டும். விண்ணப்பம் தயாரிக்கும்போது தலைப்பில் குறிப்பிட்ட பரீட்சையின் பெயரை சிங்கள பரீட்சார்த்திகள் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் பரீட்சார்த்திகள் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் தட்டச்சிடப்பட்டு தயாரிக்கப்பட இயலுமாயினும் அதனைச் சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரியின் கையெழுத்தால் பூரணப்படுத்துதல் வேண்டும். அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பரீட்சார்த்திகளால் திணைக்களத் தலைவர் ஊடாக, 2020, ஏப்பிறல் மாதம் 03 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு, "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்புக் (நிறுவனம் சார் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள்) கிளை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இலக்கம் 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் வைத்தனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். பூரணமற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்களும் கையேற்கும் இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். மேலும் பூர்த்திசெய்த விண்ணப்பப்படிவம், பரீட்சை அறிவித்தலில் குறிப்பிட்ட மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும் விண்ணப்பதாரிகள் சரிபார்த்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படும். (பூர்த்திசெய்த விண்ணப்பத்தின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.)

5. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்.**- பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தில் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின்போதும் பரீட்சை நிலையப் பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக் கொள்ளப்படும் :-

(i) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

அத்துடன் பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ஏற்ற வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் நுழைய வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தலை மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்த நேரம் முதல் பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகள் விண்ணப்பதாரரை இனங்காணுவதற்கு ஏற்ற வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காது இருத்தல் வேண்டும்.

06. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பிட்ட தகைமைகளை பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளார்கள் எனும் எடுகோளின் பேரில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட வயதெல்லையினுள், விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நேர அட்டவணை பிரதியுடன் அனுமதி அட்டையும் வழங்கப்படும். அனுமதி அட்டையின்றி பரீட்சையில் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டவுடன் அதுபற்றிய அறிவித்தல் செய்தித்தாள்களிலும் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிட்டு 2 அல்லது 3 தினங்களின் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அதுபற்றி அறிவித்தலில் குறிப்பிட்ட தொலைபேசி இலக்கங்கள் மூலம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அதன்போது விண்ணப்பதாரரின் முழுப்பெயர், முகவரி, தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயர் என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு விசாரிக்கும்போது விண்ணப்பதாரர் தம்வசம் வைத்திருந்த விண்ணப்பப்படிவத்தின் பிரதியையும், பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியையும், தபால் கந்தோரில் பதிவுசெய்த பற்றுச்சீட்டையும் கைவசம் வைத்திருத்தல் முக்கியமானதாகும். கொழும்புக்கு வெளியேயுள்ள பிரதேசமாயின் அனுமதி அட்டையின் பிரதியொன்றை அனுப்புவதற்கான தொலைநகல் இலக்கத்துடன் மேற்குறிப்பிட்ட தகவல்களையும் குறிப்பிட்டு தங்களின் வேண்டுகோள் கடிதத்தை தொலைநகல் மூலம் பரீட்சைகள் திணைக்களத்துக்கு அனுப்பி விசாரித்தலும் மிகப் பொருத்தமானதாகும்.

6.1 பரீட்சைக்கு, விண்ணப்பிக்கும் போது காணப்பட்ட பரீட்சார்த்தியின் பதவி, சேவை நிலையம் என்பன பரீட்சை சம்பந்தமான சகல நடவடிக்கைகளுக்கும் ஏற்புடையன என்பதுடன், விண்ணப்பம் அனுப்பப்பட்டதன் பின்னர் அது தொடர்பில் இடம்பெறும் மாற்றங்கள் எதுவும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

6.2 பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண்ணப்பதாரரின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரரின் கையொப்பம் நிறுவனத் தலைவரினால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலொருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

6.3 பரீட்சை தினத்தன்று தனது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொண்ட அனுமதி அட்டையை பரீட்சை நிலையப் பொறுப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

7. இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட அனுமதி அட்டையுடன் முதல் முறையாக பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏற்ற வகையில் திணைக்களத் தலைவரினால் கடமை விடுமுறை வழங்கப்படுதல் வேண்டும். பிரயாணக் கட்டணம் வழங்கப்பட மாட்டாது.

8.1 இப்பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கில மொழி மூலங்களில் மாத்திரம் நடத்தப்படும். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலமாக, போட்டிப் பரீட்சை ஒன்றின் ஊடாக சேவையில் இணைந்தவராயின் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மொழியையும் போட்டிப் பரீட்சையின்றி அரசாங்க சேவையில் இணைந்தவராயின் அரசாங்க சேவையில் இணைவதற்கு ஏற்புடைய பரீட்சைக்குத் தோற்றிய மொழியையும் மொழி மூலமாகத் தெரிவுசெய்தல் வேண்டும். பரீட்சைக்குரிய சகல பாடங்களிற்கும் ஒரே மொழி மூலத்தைப் பயன்படுத்துதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பித்த மொழிமூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

8.2 பரீட்சையில் சித்தியடையும் பொருட்டு ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் பெற வேண்டிய ஆகக்குறைந்த புள்ளி அளவு 40% ஆகும். பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளின் புள்ளிகள் அடங்கிய ஆவணமொன்று பணிப்பாளர் நாயகம், தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்திற்கு இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும். பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், பெறுபேறுகளை பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரிகளுக்கு தனிப்பட்ட ரீதியில் அறிவிக்க மாட்டார். பரீட்சைக்குரிய பாடங்களை ஒரே தடவையில் அல்லது சில தடவைகளில் பூர்த்திசெய்வதற்கு விண்ணப்பதாரிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

9. இப்பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடைபெறும்.

10. **பரீட்சைப் பாடத்திட்டம்.**- மேற்படி பதவிக்கு உரிய பரீட்சைகள் கீழ்க்குறிப்பிட்ட பாடங்களை உள்ளடக்கும் :

| பாடம் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும் | 2 மணி. | 100 | 40% |
| 2. நிதி ஒழுங்குவிதிகள் | 2 மணி. | 100 | 40% |

| | வினாப்பத்திரம் | பாடத்திட்டம் |
|---|---|---|
| 1 | அலுவலக நிர்வாகமும் தாபன விதிக் கோவையும் | * இதன் பொருட்டு தாபன விதிக்கோவையின் XV, XVI, XXIII, XXIV, XXV, XXVII, XXVIII, XXX, XXXIII, XLVII, XLVIII ஆகிய அதிகாரங்களையும் அவ்வதிகாரங்களின் மீதும் திருத்தம் செய்யப்பட்ட சுற்றறிக்கைகள் மீதும் கவனம் செலுத்துதல் வேண்டும்.<br><br>**வினாப் பத்திரத்தின் கட்டமைப்பு**<br>(a) மொத்த வினாக்களின் எண்ணிக்கை 05 ஆகும். 1 ஆம் வினா குறுகிய விடையளிக்கக்கூடியதான 10 வினாக்களை கொண்டுள்ளதுடன் ஏனைய 04 வினாக்களும் கட்டமைக்கப்பட்ட கட்டுரை/ கட்டுரை வடிவிலான வினாக்களைக் கொண்டிருக்கும்.<br>(b) எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். |
| 2 | நிதி ஒழுங்கு விதிகள் | இது நிதி ஒழுங்கு விதிகளின்கீழ் குறிப்பிடப்பட்ட அதிகாரங்களை உள்ளடக்கும் :-<br><br>* VI ஆம் அதிகாரம்- அரசாங்க நிதிப் பொறுப்பு, கட்டு நிதி, வங்கிக் கணக்கு, அரச நிதிப் பாதுகாப்பு, சுற்றாய்வுச் சபை, மேலதிகப் பற்று வங்கிக் கணக்குகள் (நி. ஒ. 315-396 வரை)<br><br>* பெறுகை வழிகாட்டல்கள் 2006 - பொருட்கள், வேலைகளின்கீழ் பெறுகைச் செயன்முறை மற்றும் அவற்றின் சகல திருத்தங்கள் மீதும் கவனம் செலுத்துதல் வேண்டும்.<br><br>**வினாப் பத்திரத்தின் கட்டமைப்பு**<br>(a) மொத்த வினாக்களின் எண்ணிக்கை 05 ஆகும். 1 ஆம் வினா குறுகிய விடையளிக்கக்கூடியதான 10 வினாக்களை கொண்டுள்ளதுடன் ஏனைய 04 வினாக்களும் கட்டமைக்கப்பட்ட கட்டுரை/ கட்டுரை வடிவிலான வினாக்களைக் கொண்டிருக்கும்.<br>(b) எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். |

**குறிப்பு** :

* மேற்படி பாடங்களுக்கு தனித்தனியாகவும் தோற்ற முடியும்.
* குறித்த காலத்தில் பரீட்சையில் சித்தியடையாமை அதன் பின்னரான வேதன ஆண்டேற்றத்தை பிற்போடுவதற்கு ஏதுவாகலாம்.

11. பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுதலானது, அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமையுள்ளவர் எனக் கருதப்படுதலாகாது.

12. பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சை அபேட்சகர்கள் கட்டுப்படுதல் வேண்டும். குறித்த சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாக அவருக்கு நேரிடும்.

13. இவ்வர்த்தமானி அறிவித்தலில் கூறப்பட்ட ஏற்பாடுகள் தவிர்ந்த வேறு ஏதேனும் விடயம் தொடர்பில் தொகைமதிப்பு புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

14. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கிலப் பதிப்புகளில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் சிங்களப் பதிப்பில் குறிப்பிட்ட விடயங்களே உத்தியோகபூர்வமானவையாகும்.

பணிப்பாளர் நாயகம்,
தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்.

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்,
"சங்கியான மந்திரய",
இல. 306/71, பொல்தூவ வீதி,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் I இற்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2013(2020)**

Second Efficiency Bar Examination for Grade 1 Statistical Officers in the Department of Census and Statistics - 2013(2020)

(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

01. 1.1 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
(உ-ம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதிப் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களை இறுதியிலும் இட்டு பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
(உ-ம் : GUNAWARDHANA, H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (தமிழில்/சிங்களத்தில்) :----.

02. 2.1 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :------------.
(அனுமதி அட்டை இந்த முகவரிக்கு தபாலில் அனுப்பப்படும்.)

2.2 அலுவலகத்தின் /திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (தமிழில்/சிங்களத்தில்) : --------------.

2.3 தனிப்பட்ட முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :------------------------.

2.4 கையடக்க தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

நிலையான தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

03. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

04. பால் (ஆண்/பெண்) :
ஆண் - 0
பெண் - 1

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

05. நீங்கள் இம்முறை தோற்றவுள்ள பாடம்/பாடங்கள் :

| தொடர் இலக்கம் | பாடம் | பாட இலக்கம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

06. பிறந்த திகதி :

வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

07. தற்போது வகிக்கும் பதவி :

7.1 பதவி :----.

7.2 நியமனக் கடித இலக்கம் :----.

08. 8.1 நீங்கள் பரீட்சைக்கு முதற் தடவையாகவா தோற்றுகிறீர்கள் ? :----.

8.2 முதற் தடவையல்லாவிடின் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் :----.

8.3 பற்றுச்சீட்டு இல. :----.

8.4 திகதி :----.

| |
|---|
| பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும். (ஏற்புடையதாயின் மட்டும்)<br>(பற்றுச்சீட்டின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.) |

09. விண்ணப்பதாரரின் வெளிப்படுத்துகை :

மேற்குறிப்பிட்ட விபரங்கள் சரியானதென்றும் மேற்குறிப்பிட்ட மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவரென்றும் பரீட்சைக் கட்டணம் ரூபா ............................. செலுத்திப்பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளதென்றும் தெரிவித்துக்கொள்வதுடன் இப்பரீட்சையை நடத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப அமைந்தொழுக உடன் படுகின்றேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

-----------,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- தமது திணைக்களத் தலைவர் அல்லது திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் முன்னிலையில் பரீட்சார்த்தி கையொப்பமிடுதல் வேண்டும்.

**10. கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

திரு./ திருமதி/ செல்வி ............................................. எனது திணைக்களத்தில் சேவையாற்றுகிறார் என்றும் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் .................................................. ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

-------------,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
அலுவலரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்.)

*11.* ***திணைக்களத் தலைவரின் சான்றுரை*** :

(1) மேலே வழங்கப்பட்ட விபரங்கள் சரிபார்க்கப்பட்டதென்றும்,
(2) உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர் என்றும் சான்றுபடுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

*03-412/2*

---

## பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிகள் அமைச்சு

*கிராம அலுவலர் சேவையின் I ஆம் வகுப்பின் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை-2019 (2020)*

1.0 கிராம அலுவலர் சேவையின் I ஆம் வகுப்பின் அலுவலர்களுக்கான, ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் ஏற்பாடுகளுக்கமைய, வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையொன்று, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2020 ஆம் ஆண்டு மே மாதத்தில் நடாத்தப்படுமென்றும், அதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றதென்றும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2.0 கிராம அலுவலர் சேவையின் I ஆம் வகுப்பின் அலுவலர்களுக்கான இப்பரீட்சையானது கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், அநுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி ஆகிய நகரங்களில் நடைபெறும். தொடர்பான நகரங்களும் நகர இலக்கங்களும் பின்வரும் கூட்டில் காட்டப்பட்டுள்ளன. விண்ணப்பப்படிவத்தில் இந்நகரங்களும் நகர இலக்கங்களும் அவை குறிப்பிடப்பட்டுள்ள கூட்டுக்கமைய நிரப்பப்படல் வேண்டும். விண்ணப்பிக்கப்பட்ட நகரமும்/நகரங்களும் பின்னர் மாற்றப்படுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. மேற்குறிப்பிடப்பட்ட ஏதேனும் ஒரு நிலையத்திற்குப் போதியளவு விண்ணப்பதாரிகள் தொகை இல்லாதுவிடின், அந்நிலையம் இரத்துச் செய்யப்பட்டு அதற்கு அண்மித்த நிலையமொன்றிற்கு உரிய விண்ணப்பதாரர்கள் அனுப்பப்படுவர். மேலும் தீர்மானிக்கப்பட்ட அனைத்து நகரங்களிலோ அல்லது கூடுதலான எண்ணிக்கையிலோ அல்லது பரீட்சை நிலையங்களை

ஸ்தாபித்தல் தொடர்பாக போதுமானளவு எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்காதவிடத்து கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் பரீட்சை நடத்துவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| *நகரம்* | *நகர இலக்கம்* |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| மாத்தறை | 04 |
| யாழ்ப்பாணம் | 05 |
| மன்னார் | 06 |
| முல்லைத்தீவு | 07 |
| திருகோணமலை | 08 |
| மட்டக்களப்பு | 09 |
| குருநாகல் | 10 |
| அநுராதபுரம் | 11 |
| பதுளை | 12 |
| இரத்தினபுரி | 13 |
| கிளிநொச்சி | 14 |

3. (i) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன், பரீட்சையினை நடாத்துவது மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பாக அவரால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்குப் பரீட்சார்த்திகள் கட்டுப்படுவர்.

(ii) பரீட்சார்த்திகளுக்கு விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்கள் வர்த்தமானி அறிவித்தலில் தனியாக அச்சிடப்பட்டுள்ளன. இச்சட்டதிட்டங்கள் மீறப்படின், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனையொன்றுக்கு அவர்கள் ஆளாக நேரிடும்.

4. ***தகைமைகள்.***- 2010 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதி தொடக்கம் அமுலில் உள்ள கிராம அலுவலர் ஆட்சேர்ப்பு நடைமுறையின்படி, கிராம அலுவலர் சேவையின் I ஆம் வகுப்புக்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெறுவர்.

5. ***பரீட்சை நடைமுறை.***- விண்ணப்பதாரர்கள் கீழே காட்டப்பட்டுள்ள பாடங்கள் உள்ளடக்கப்பட்ட எழுத்துப் பரீட்சையொன்றிற்குத் தோற்றுதல் வேண்டும் :

| *விடயம்* | *விடய இலக்கம்* | *நேரம்* | *புள்ளிகள்* | *பெற்ற புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| அலுவலக அமைப்புகள், பொது நடத்தை மற்றும் பொதுச் சேவையில் ஒழுக்கம் | 1 | 1 1/ 2 மணி | 100 | 40% |
| விடயம் தொடர்பான கற்கையும் தொழில்சார் அறிவும் | 2 | 1 1/ 2 மணி | 100 | 40% |

5.1 **அலுவலக முறைகள், அரசாங்க சேவையில் பொதுவான நடத்தையும் ஒழுக்கமும்** :

***அலுவலக முறைகள்.***- அரசாங்க அலுவலகங்களிலும் கிராம அலுவலர் அலுவலகங்களிலும் உபயோகிக்கப்படும் அலுவலக முறைகள் பற்றிய அறிவு மற்றும் அவ்வறிவை நடைமுறையில் பயன்படுத்தத்தக்க ஆற்றல் என்பன இதன்போது அளவிடப்பட எதிர்பார்க்கப்படுகின்றது.

***அரசாங்க சேவையில் பொதுவான நடத்தையும் ஒழுக்கமும்.***- அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் பிரகாரம், ஒழுக்காற்று அதிகாரம் பிரிக்கப்பட்டுள்ள முறைகள், சேவையினை முடிவுறுத்துதல், ஓய்வுபெறச் செய்தல் தொடர்பான விதிகள் மற்றும் தாபனக் கோவையின் II ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள பொது நடத்தை

மற்றும் ஒழுக்கச் செயற்பாட்டுடன் தொடர்பான XIVII மற்றும் XIVIII அத்தியாயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் அவை தொடர்பாக காலத்திற்குக் காலம் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் பற்றி விண்ணப்பதாரர்கள் கொண்டுள்ள அறிவும் விளக்கமும் பரீட்சிக்கப்படும்.

இவ்வினாப்பத்திரம் இரு பகுதிகளைக் கொண்டது :

*I ஆம் பகுதி.-* பல்தேர்வு வினாப்பத்திரம் - காலம் : 30 நிமிடங்கள் - (25 புள்ளிகள்)

*II ஆம் பகுதி.-* ஐந்து வினாக்களைக் கொண்ட அரைவாசி கட்டமைக்கப்பட்ட கட்டுரை வடிவிலான வினாப்பத்திரமாகும். ஐந்து வினாக்களுக்கும் பதில் அளித்தல் வேண்டும். காலம் : 1 மணித்தியாலம் - (75 புள்ளிகள்)

5.2 ***விடயம் தொடர்பான கற்கையும் தொழில்சார் அறிவும்.-*** கிராம அலுவலர்களுக்கு உரிய பல்வேறு சட்டதிட்டங்கள், அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் மாகாண சபைகள், வேறு நியதிச்சட்ட நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டுள்ள கடமைகள் தொடர்பான அறிவு பரீட்சிக்கப்படுவதுடன், அவ்விடயத்துடன் தொடர்பான சம்பவங்கள் பற்றிய விடய ஆய்வும் உள்ளடக்கப்படும்.

*I ஆம் பகுதி.-* பல்தேர்வு வினாப்பத்திரம் - காலம் : 30 நிமிடங்கள் - (25 புள்ளிகள்)

*II ஆம் பகுதி.-* ஐந்து வினாக்களைக் கொண்ட அரைவாசி கட்டமைக்கப்பட்ட கட்டுரை வடிவிலான வினாப்பத்திரமாகும். ஐந்து வினாக்களுக்கும் பதில் அளித்தல் வேண்டும். காலம் : 1 மணித்தியாலம் - (75 புள்ளிகள்)

6. சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மாத்திரம் இப்பரீட்சை நடைபெறுவதுடன், இச்சேவையில் சேர்வதற்கான பரீட்சைக்குத் தோற்றிய மொழியில் அல்லது அரச கரும மொழியில் அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும். போட்டிப் பரீட்சை இன்றி சேவையில் சேர்ந்த அலுவலர்கள் தாம் கல்வி கற்ற மொழி மூலம் அல்லது அரச கரும மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும். பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் மொழி மூலம் பின்னர் மாற்றப்படுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

7. தாம் விரும்பினால் ஒவ்வொரு பாடத்திற்கும் வெவ்வேறாகவும், ஒன்றுக்கொன்று வித்தியாசமான அமர்வுகளில் அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்ற முடியும். எனினும், சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் விதிக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளில் ஆகக் குறைந்தது நாற்பது வீதம் (40%) என்ற வகையில் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். எல்லாப் பாடங்களிலும் சித்திபெற்று, பரீட்சை பூரணத்துவப்படுத்தப்படும் ஆண்டில் பரீட்சை நடாத்தப்பட்ட இறுதி நாள், இவ்வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை சித்தியடைந்த நாளாகக் கருதப்படும்.

8. பரீட்சை முடிவுகள், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எனக்கு வழங்கப்படுவதுடன், பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் பெயர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஊடாக விண்ணப்பதாரர்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

9. விண்ணப்பப்பத்திரமானது இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்துடன் ஒத்ததாக இருத்தல் வேண்டும். அந்த மாதிரி விண்ணப்பப்படிவத்தின்படி விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப்படிவத்தைத் தயார் செய்து கொள்ள வேண்டியதுடன், அதன்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை, விண்ணப்பதாரர்களினால் தமது சேவைப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதேச செயலாளர் ஊடாக 2020, பங்குனி 30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர், "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, த. பெ. இல. 1503, கொழும்பு" எனும் முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவங்கள் அடங்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்களும் உரிய விபரங்கள் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

10. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தோற்றும் எல்லாப் பாடங்களின்போதும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையக்கூடிய விதத்தில் தனது அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றைப் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அத்தோடு பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக முகம் மற்றும் காதினை மூடாத வண்ணம் பரீட்சை நிலையத்திற்குள் செல்ல வேண்டும். தனது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாத பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தில் உள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், உள் நுழையப்பட்ட விண்ணப்பதாரர்களை அடையாளம் கண்டு கொள்ளும் வகையில் மூடாத வண்ணம் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

11. **விண்ணப்பங்கள்**.- மாதிரி விண்ணப்பப்படிவத்தில் 1.0 தொடக்கம் 6.0 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும், 7.0 தொடக்கம் ஏனையவை அனைத்தும் இரண்டாம் பக்கத்திலும் உள்ளடக்கப்படும் விதத்தில் 'A4' அளவிலான தாளொன்றில் விண்ணப்பப்பத்திரம் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப்பத்திரம் தட்டச்சு மூலம் தயாரிக்கப்பட முடியுமெனினும், அது சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரியின் கையெழுத்து மூலமே நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் இத்துடனுள்ள மாதிரியின்படியே தயாரிக்கப்பட வேண்டியதுடன், ஒரு விண்ணப்பதாரர் ஒரு விண்ணப்பத்தை மட்டுமே சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன், விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியை அனுப்ப வேண்டாமென அறிவிக்கப்படுகின்றது. மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் ஒத்திணையாத மற்றும் முழுமையற்ற விதத்தில் தகவல் குறிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்பத்திரங்கள், அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். பரீட்சை விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர், சிங்கள விண்ணப்பப்பத்திரங்களில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படுதல் வேண்டும். மேலும், பூரணப்படுத்தப்படும் விண்ணப்பப்பத்திரம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் ஒத்து இணங்கியுள்ளதா என்பதனையிட்டு விண்ணப்பதாரர் நன்றாக விசாரித்தறிய வேண்டியதுடன், அவ்விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியொன்றைத் தம்மிடம் வைத்துக்கொள்வது பயனுடையதாக இருக்கும்.

12. முதற் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள், எவ்விதப் பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. எனினும், அதன் பின்னரான பரீட்சைகளின்போது அலுவலர்களினால் ஒரே முறையில் முழுப் பரீட்சைக்கும் தோற்றுவதெனின், பரீட்சைக் கட்டணம் 500 ரூபாவும், ஒரு பாடத்துக்கு மட்டும் தோற்றுவதெனின் 250 ரூபாவும் ஆகும். இப்பரீட்சைக் கட்டணம், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இல் வரவு வைக்கப்படக்கூடிய விதமாக, நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு மாவட்ட அல்லது பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். மேலும் ஒரு நிழற்படப் பிரதியைத் தம்மிடம் வைத்துக் கொள்ளுதல் பயனுடையதாக இருக்கும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. இப்பரீட்சைக்காகச் செலுத்தப்படும் கட்டணத்தை வேறு எந்தப் பரீட்சைக்காகவும் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

13. அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர், பரீட்சைக் கட்டணம் செலுத்தவேண்டியிருப்பின் உரிய பற்றுச்சீட்டுடன் சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்குப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால், பரீட்சை நேர அட்டவணைப் பிரதியொன்றுடன், பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். விண்ணப்பதாரர் ஒருவருக்குப் பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்குதல், அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் எனக் கருதக்கூடாது. பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்களினால் பரீட்சை மண்டப அதிகாரியிடம் அவர்களது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அனுமதிப்பத்திரம் இன்றிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டதுடன், அது தொடர்பான பத்திரிகை அறிவித்தலொன்று பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு இரண்டு அல்லது மூன்று நாட்கள் கழிந்த பின்னரும் அனுமதிப்பத்திரம் கிடைக்கவில்லையெனின், அறிவித்தலில் கூறப்பட்ட விதத்தில் அதனையிட்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளைக்கு அறிவித்தல் வேண்டும். தங்களால் வைத்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தினதும், பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியினதும், பதிவு செய்யப்பட்ட சீட்டினதும் கொழும்புக்கு வெளியே உள்ள பிரதேசமொன்றெனின் அனுமதிப்பத்திரத்தை அனுப்புவதற்காகத் தொலைநகல் இலக்கமொன்றையும் குறிப்பிட்டுத் தங்களது கோரிக்கைக் கடிதத்தினை, அதன் பிரதியையும் தங்களிடம் வைத்துக்கொண்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்புவது மிகவும் பொருத்தமாக இருக்கும்.

14. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் உள்ள அலுவலர்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முடியுமான வகையில் திணைக்களத் தலைவர்களினால் விடுமுறை வழங்கப்படுதல் வேண்டும். பயணச் செலவு வழங்கப்படமாட்டாது.

15. பரீட்சை நடாத்துவது மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது சம்பந்தமாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு விண்ணப்பதாரர்கள் கட்டுப்படுதல் வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு உள்ளாக வேண்டி ஏற்படுவதுடன், இப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவர் அல்லர் எனத் தெரியவரும் பட்சத்தில், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது அல்லது அதற்குப் பின்னர் போன்ற

எச்சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்த நிலை இரத்துச் செய்யப்படும். இப்பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டிராத, இப்பரீட்சையுடன் தொடர்புடைய எந்தவொரு விடயம் பற்றியும் எனது தீர்மானம் இறுதித் தீர்மானமாக அமையும்.

16. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்பட்டுள்ள இவ்வறிவித்தலிலுள்ள வாசகங்களிடையே ஏதேனும் வேறுபாடு அல்லது கருத்து மயக்கம் காணப்படுமாயின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடவடிக்கை எடுக்கப்படும்.

எஸ். ஹெட்டியாராச்சி,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
நில மெதுர,
எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 5,
2020, பெப்புருவரி 25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக பாவனைக்கு மட்டும்)

**கிராம அலுவலர் சேவையின் I ஆம் வகுப்பு அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடை தாண்டல் பரீட்சை - 2019 (2020)**

Efficiency bar Examination For Officers in class I of Grama Niladhari Service - 2019 (2020)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3

(உரிய இலக்கத்தைக் கூண்டினுள் எழுதவும். இதனை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

| | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| முதலாம் தெரிவு | 1. | |
| இரண்டாம் தெரிவு | 2. | |

(வர்த்தமானி அறிவித்தலின் 2.0 பந்தியின் படி தாங்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரங்களை விருப்புரிமை வரிசைப்படி குறிப்பிடுக.) (இதனைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

---

01.1.1 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDANA)

1.2 விண்ணப்பதாரரின் முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : GUNAWARDANA, H. M. S. K.)

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2.0

2.1 பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

2.2 உரிய மாவட்டமும் மாவட்ட இலக்கமும் :----------

(உப பிரிவு 1 இல் குறிப்பிட்டபடி) (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

2.3 உரிய பிரதேச செயலாளர் பிரிவும், பிரதேச செயலாளர் இலக்கமும் :------.
(உப பிரிவு 1 இல் குறிப்பிட்டபடி) (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

| | | |
|---|---|---|
| | | |

2.4 உரிய மாவட்டமும் பிரதேச செயலாளர் பிரிவும் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

3.0

3.1 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

3.2 பால் (ஆண்/ பெண்) : ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

3.3 பிறந்த திகதி :-

ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |

4.0 தாங்கள் இம்முறை பரீட்சையில் தோற்றும் விடயம்/விடயங்கள் (வர்த்தமானி அறிவித்தலின் 05 ஆம் பந்தியைப் பார்க்கவும்):

| தொடர் இலக்கம் | விடயம் | பரீட்சை இலக்கம் |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |

5.0

5.1 உரிய தரம் :----.
5.2 பதவி :----.
5.3 தொடர்பான தரத்தில் நியமனம் பெற்ற திகதி :----.
5.4 தொலைபேசி இல. :----.

6.0 **கவனித்தல் வேண்டும்.**- வர்த்தமானி அறிவித்தலில் காண்பிக்கப்பட்டுள்ளபடி பரீட்சைக் கட்டணத்திற்காக விதிக்கப்பட்ட பணம் செலுத்தப்பட்டதாக தபால்/உப தபால் அலுவலகத்தினால் விண்ணப்பதாரரின் பெயரிலேயே பெறப்பட்ட பற்றுச்சீட்டு இங்கு கழறாதவாறு ஒட்டப்படுதல் வேண்டும் :

பற்றுச்சீட்டு இலக்கம் :----.
தபால்/ உப தபால் அலுவலகம் :----.
திகதி :----.
பணம் ரூபா :----.

7.0 மேலே குறிப்பிடப்பட்ட விபரங்கள் சரியானவை என்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலங்களில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்கு உரித்துண்டு என்றும் குறிப்பிடுகின்றேன்.

மேலும் பரீட்சையினை நடாத்துவது தொடர்பாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்படுவதாகவும் குறிப்பிடுகின்றேன்.

-----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**பிரதேச செயலாளரின் உறுதிப்படுத்தல்**

......................................... பிரதேச செயலாளர் பிரிவில் ......................................... கிராம அலுவலர் பகுதியில் கடமையாற்றும் கிராம அலுவலர் திரு./ திருமதி/ செல்வி ......................................... என்பவர்,

(i) என் முன்னிலையில் கையொப்பமிட்டாரென்றும்,

(ii) மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சித்துப் பார்க்கப்பட்டனவென்றும்,

(iii) ஆண் அலுவலர்/ பெண் அலுவலர் இப்பரீட்சையில் தோற்றுவதற்குத் தகுதியானவரென்றும்,

(iv) முதலாவது அமர்வு காரணமாக பரீட்சைக் கட்டணத்திலிருந்து அலுவலர் விலக்களிக்கப்படுகின்றார்/ குறித்துரைக்கப்பட்ட பரீட்சைக் கட்டணப் பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது என்றும் நான் உறுதிப்படுத்துகின்றேன். (அவசியமற்றவற்றை வெட்டிவிடுக.).

-----,
பிரதேச செயலாளரின் கையொப்பமும்,
அலுவலக முத்திரையும்.

பெயர்:----.
பதவிப் பெயர்:----
முகவரி :-----.
திகதி :-----.

**அட்டவணை I**

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| கொழும்பு | 1103 | கொழும்பு 0 1 |
| கொலன்னாவை | 1106 | |
| கடுவெல | 1109 | |
| ஹோமாகம | 1112 | |
| ஹங்வெல்ல | 1115 | |
| பாதுக்க | 1118 | |
| மகரகம | 1121 | |
| ஸ்ரீஜயவர்தனபுர கோட்டே | 1124 | |
| திம்பிரிகஸ்யாய | 1127 | |
| தெஹிவளை | 1130 | |
| இரத்மலானை | 1131 | |
| மொரட்டுவை | 1133 | |
| கெஸ்பாவ | 1136 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| நீர்கொழும்பு | 1203 | கம்பஹா 0 2 |
| கந்தான | 1206 | |
| திவுலப்பிட்டிய | 1209 | |
| மீரிகம | 1212 | |
| மினுவங்கொட | 1215 | |
| வத்தளை | 1218 | |
| ஜா-எல | 1221 | |
| கம்பஹா | 1224 | |
| அத்தனகல்ல | 1227 | |
| தொம்பே | 1230 | |
| மஹர | 1233 | |
| களனிய | 1236 | |
| பியகம | 1239 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| பாணந்துறை | 1303 | களுத்துறை 0 3 |
| பண்டாரகம | 1306 | |
| ஹொரண | 1309 | |
| இங்கிரிய | 1310 | |
| புலத்சிங்ஹள | 1312 | |
| மதுராவல | 1315 | |
| மிலனிய | 1318 | |
| களுத்துறை | 1321 | |
| பேருவளை | 1324 | |
| தொடங்கொட | 1327 | |
| மத்துகம | 1330 | |
| அகலவத்த | 1333 | |
| பாலிந்தநுவர | 1336 | |
| வளல்லாவிட்ட | 1339 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| தும்பனை | 2103 | கண்டி 0 4 |
| பூஜாபிட்டிய | 2106 | |
| அக்குறணை | 2109 | |
| பாத்ததும்பர | 2112 | |
| பன்னவல | 2115 | |
| உடதும்பர | 2118 | |
| மினிப்பை | 2121 | |
| மெததும்பர | 2124 | |
| குண்டசாலை | 2127 | |
| கங்கவட கோரளை | 2130 | |
| ஹாரிஸ்பத்துவ | 2133 | |
| ஹதரலியத்த | 2134 | |
| யட்டிநுவர | 2136 | |
| உடுநுவர | 2139 | |
| தொலுவ | 2142 | |
| பாத்தஹேவாஹெட்ட | 2145 | |
| தெல்தொட | 2148 | |
| உடபலாத்த | 2151 | |
| கங்கஇஹள கோரளை | 2154 | |
| பஸ்பாகே கோரளை | 2157 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| கலேவெல | 2203 | |
| தம்புள்ள | 2206 | |
| நாஉல | 2209 | |
| பள்ளேபொல | 2212 | |
| யட்டவத்த | 2215 | மாத்தளை |
| மாத்தளை | 2218 | 0 5 |
| அம்பகஹ கோரளை | 2221 | |
| யக்கல பள்ளேகம | 2224 | |
| வில்கமுவ | 2227 | |
| ரத்தொட்ட | 2230 | |
| உக்குவல | 2233 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| கொத்மலை | 2303 | |
| ஹங்குரன்கெத்த | 2306 | நுவரெலியா |
| வலப்பனை | 2309 | |
| நுவரெலியா | 2312 | 0 6 |
| அம்பகமுவ | 2315 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| பெந்தோட்டை | 3103 | |
| பலபிட்டிய | 3106 | |
| கரந்தெனிய | 3109 | |
| எல்பிட்டி | 3112 | |
| நியாகம | 3115 | |
| தவலம | 3118 | |
| நெழுவ | 3121 | |
| நாகொடை | 3124 | |
| பத்தேகம | 3127 | காலி |
| வெலிவிடிய-திவிதுர | 3130 | 0 7 |
| அம்பலாங்கொடை | 3133 | |
| ஹிக்கடுவ | 3136 | |
| கடவத்ஸதர | 3139 | |
| போபே-போத்தல | 3142 | |
| அக்மீமன | 3145 | |
| யக்களமுல்ல | 3148 | |
| இமதுவ | 3151 | |
| கோனபீனுவல | 3154 | |
| ஹபராதுவ | 3157 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| பிடபெத்தர | 3203 | மாத்தறை 0 8 |
| கோடபொல | 3206 | |
| பஸ்கொட | 3209 | |
| முலடியன | 3212 | |
| அதுரலிய | 3215 | |
| அகுரஸ்ஸ | 3218 | |
| வெலிப்பிட்டிய | 3221 | |
| மாலிம்பட | 3224 | |
| கம்புறுபிட்டிய | 3227 | |
| ஹக்மன | 3230 | |
| கிரிந்த புஹுல்வெல்ல | 3233 | |
| திஹகொட | 3236 | |
| வெலிகம | 3239 | |
| மாத்தறை | 3242 | |
| தெவிநுவர | 3245 | |
| திக்வெல்ல | 3248 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| சூரியவெவ | 3303 | அம்பாந்தோட்டை 0 5 |
| லுணுகம்வெஹெர | 3306 | |
| திஸ்ஸமகாராம | 3309 | |
| அம்பாந்தோட்டை | 3312 | |
| அம்பலந்தோட்டை | 3315 | |
| அங்குனுகொலபெலஸ்ஸ | 3318 | |
| வீரகெட்டிய | 3321 | |
| கடுவன | 3324 | |
| ஓகேவெவ | 3327 | |
| பெலியத்த | 3330 | |
| தங்கல்ல | 3333 | |
| வலஸ்முல்ல | 3336 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| ஊர்காவற்துறை (தீவகம் வடக்கு) | 4103 | யாழ்ப்பாணம் 1 0 |
| சங்கானை (வலிகாமம் மேற்கு) | 4106 | |
| சண்டிலிப்பாய் (வலிகாமம் தென்மேற்கு) | 4109 | |
| தெல்லிப்பளை (வலிகாமம் வடக்கு) | 4112 | |
| உடுவில் (வலிகாமம் தெற்கு) | 4115 | |
| கோப்பாய்(வலிகாமம் கிழக்கு) | 4118 | |
| கரவெட்டி(வடமராட்சி) | 4121 | |
| மருதங்கேணி (வடமராட்சி கிழக்கு) | 4124 | |
| பருத்தித்துறை (வடமராட்சி வடக்கு) | 4127 | |
| சாவகச்சேரி (தென்மராட்சி) | 4130 | |
| நல்லூர் | 4133 | |
| யாழ்ப்பாணம் | 4136 | |
| வேலனை (தீவகம் தெற்கு) | 4139 | |
| தீவுப்பகுதி | 4142 | |
| காரைநகர் | 4145 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| மன்னார் | 4203 | மன்னார் 1 1 |
| மாந்தை மேற்கு | 4206 | |
| மடு | 4209 | |
| நானாட்டான் | 4212 | |
| முசலி | 4215 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| வவுனியா வடக்கு | 4303 | வவுனியா 1 2 |
| வவுனியா தெற்கு | 4306 | |
| வவுனியா | 4309 | |
| வென்கலசெட்டிகுளம் | 4312 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| துணுக்காய் | 4403 | முல்லைத்தீவு 1 3 |
| மாந்தை கிழக்கு | 4406 | |
| புதுக்குடியிருப்பு | 4409 | |
| ஒட்டுசுட்டான் | 4412 | |
| கரைதுறைப்பற்று | 4415 | |
| வெலிஓய | 4418 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| பச்சிளைப்பள்ளி | 4503 | கிளிநொச்சி 1 4 |
| கண்டாவளை | 4506 | |
| கரைச்சி | 4509 | |
| பூநகரி | 4512 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| கோரளைப்பற்று வடக்கு | 5103 | மட்டக்களப்பு 1 5 |
| கோரளைப்பற்று மேற்கு (ஓட்டமாவடி) | 5106 | |
| கோரளைப்பற்று வாழைச்சேனை | 5109 | |
| ஏறாவூர் பற்று | 5112 | |
| ஏறாவூர் நகரம் | 5115 | |
| மண்முனை வடக்கு | 5118 | |
| மண்முனை மேற்கு | 5121 | |
| காத்தான்குடி | 5124 | |
| மண்முனைப்பற்று | 5127 | |
| மண்முனை தென்மேற்கு | 5130 | |
| போரதீவுப்பற்று | 5133 | |
| மண்முனை தெற்கு | 5136 | |
| கோரளைப்பற்று தெற்கு | 5139 | |
| கோரளைப்பற்று மத்தி | 5142 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| தெஹியத்த கண்டிய | 5203 | அம்பாறை 1 6 |
| பதியதலாவ | 5206 | |
| மஹஓய | 5209 | |
| உஹன | 5212 | |
| அம்பாறை | 5215 | |
| நாவிதன்வெளி | 5216 | |
| சம்மாந்துறை | 5218 | |
| கல்முனை தமிழ் | 5224 | |
| சாய்ந்தமருது | 5225 | |
| காரைதீவு | 5227 | |
| நிந்தவூர் | 5230 | |
| அட்டாளைச்சேனை | 5233 | |
| இறக்காமம் | 5234 | |
| அக்கறைப்பற்று | 5236 | |
| ஆலையடிவேம்பு | 5239 | |
| தமன | 5242 | |
| திருக்கோவில் | 5245 | |
| பொத்துவில் | 5248 | |
| லாகுகல | 5251 | |
| கல்முனை முஸ்லீம் | 5254 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| | | |
| பதவிசிறிபுற | 5303 | திருகோணமலை 1 7 |
| குச்சவெளி | 5306 | |
| கோமரங்கடவெல | 5309 | |
| மொரவெவ | 5312 | |
| பட்டினமும் சூழலும் | 5315 | |
| தம்பலகம | 5318 | |
| கந்தளாய் | 5321 | |
| கிண்ணியா | 5324 | |
| மூதூர் | 5327 | |
| சேருவில | 5330 | |
| வெருக்கல ஈச்சிலம்பத்துவ | 5333 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| கிரிபாவ | 6103 | குருநாகல் 1 8 |
| கல்கமுவ | 6106 | |
| எஹத்துவெவ | 6109 | |
| அம்பன்பொல | 6112 | |
| கொடவெஹெர | 6115 | |
| ரஸ்நாயக்கபுர | 6118 | |
| நிக்கவரட்டிய | 6121 | |
| மஹவ | 6124 | |
| பொல்பிதிகம | 6127 | |
| இப்பாகமுவ | 6130 | |
| கணேவத்த | 6133 | |
| வாறியபொல | 6136 | |
| கொபேய்கணே | 6139 | |
| பிங்கிரிய | 6142 | |
| பமுணாகொடுவ | 6149 | |
| மாஸ்பொத | 6151 | |
| குருநாகல் | 6154 | |
| மல்லவபிட்டிய | 6157 | |
| மாவத்தகம | 6160 | |
| ரீதிகம | 6163 | |
| வீரம்புகெதர | 6166 | |
| குளியாப்பிட்டி கிழக்கு | 6169 | |
| குளியாப்பிட்டி மேற்கு | 6172 | |
| உடுபத்தாவ | 6175 | |
| பண்ணல | 6178 | |
| நாரம்மல | 6181 | |
| அளவ்வை | 6184 | |
| பொல்கஹவெல | 6187 | |
| பண்டுவஸ்நுவர கிழக்கு | 6190 | |
| பண்டுவஸ்நுவர மேற்கு | 6193 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| கற்பிட்டி | 6203 | புத்தளம் 1 9 |
| வனாதவில்லுவ | 6206 | |
| கருவலகஸ்வெவ | 6209 | |
| நவகத்தேகம | 6212 | |
| புத்தளம் | 6215 | |
| முந்தல் | 6218 | |
| மஹா கும்புக்கடவல | 6221 | |
| ஆனமடுவ | 6224 | |
| பள்ளம | 6227 | |
| ஆரச்சிகட்டுவ | 6230 | |
| சிலாபம் | 6233 | |
| மாதம்பை | 6236 | |
| மகாவெவ | 6239 | |
| நாத்தாண்டிய | 6242 | |
| வென்னப்புவை | 6245 | |
| தங்கொட்டுவ | 6248 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| பதவிய | 7103 | அநுராதபுரம் 2 0 |
| கெபிதிகொல்லாவ | 7106 | |
| மதவாச்சி | 7109 | |
| மஹவிலச்சிய | 7112 | |
| மத்திய நுவரகம் பளாத | 7115 | |
| ரம்பேவ | 7118 | |
| கஹடகஸ்திகிலிய | 7121 | |
| ஹொரவபொத்தான | 7124 | |
| கலென்பிந்துனுவெவ | 7127 | |
| மிஹிந்தலை | 7130 | |
| கிழக்கு நுவரகம் பளாத | 7133 | |
| நாச்சியதுவ | 7136 | |
| நொச்சியாகம | 7139 | |
| ராஜாங்கனை | 7142 | |
| தம்புத்தேகம | 7145 | |
| தலாவ | 7148 | |
| திரப்பனை | 7151 | |
| கெகிராவ | 7154 | |
| பளுகஸ்வெவ | 7157 | |
| இப்பாகமுவ | 7160 | |
| கல்னேவ | 7163 | |
| பலாகல | 7166 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| ஹிங்குரக்கொட | 7203 | பொலன்னறுவ 2 1 |
| மெதிரிகிரிய | 7206 | |
| லங்காபுர | 7209 | |
| வெலிகந்தை | 7210 | |
| திம்பலாகம | 7212 | |
| தமன்கடுவ | 7215 | |
| எலஹர | 7218 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| மகியங்கனை | 8103 | பதுளை 2 2 |
| ரீதிமாலியத்தை | 8106 | |
| மீகஹகிவுல | 8109 | |
| கன்தகெட்டிய | 8112 | |
| சொர்ணாதோட்டை | 8115 | |
| பசறை | 8118 | |
| லுனுகல | 8119 | |
| பதுளை | 8121 | |
| ஹாலி எல | 8124 | |
| ஊவா-பரணகம | 8127 | |
| வெலிமடை | 8130 | |
| பண்டாரவளை | 8133 | |
| எல்ல | 8136 | |
| அப்புத்தளை | 8139 | |
| ஹல்தும்முல்ல | 8142 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| பிபில | 8203 | மொனராகல 2 3 |
| மடுல்ல | 8206 | |
| மெதகம | 8209 | |
| சியம்பலாண்டுவ | 8212 | |
| மொனராகல | 8215 | |
| படல்கும்புர | 8218 | |
| புத்தல | 8221 | |
| வெள்ளவாய | 8224 | |
| கதிர்காமம் | 8227 | |
| தனமல்வில | 8230 | |
| செவனகல | 8233 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| எஹலியகொடை | 9103 | இரத்தினபுரி 2 4 |
| குருவிட்ட | 9106 | |
| கிரிஎல்ல | 9109 | |
| இரத்தினபுரி | 9112 | |
| இம்புல்பே | 9115 | |
| பலாங்கொடை | 9118 | |
| ஓபநாயக | 9121 | |
| பெல்மதுளை | 9124 | |
| எலபத்த | 9127 | |
| அயகம | 9130 | |
| கலவான | 9133 | |
| நிவிதிகல | 9136 | |
| கஹவத்த | 9139 | |
| கொடகவெல | 9142 | |
| வெலிகேபொல | 9145 | |
| எம்பிலிபிட்டிய | 9148 | |
| கொலன்ன | 9151 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| ரம்புக்கனை | 9203 | கேகாலை 2 5 |
| மாவனல்ல | 9206 | |
| அரணாயக்க | 9209 | |
| கேகாலை | 9212 | |
| கலிகமுவ | 9215 | |
| வரகாபொல | 9218 | |
| ருவன்வெல்ல | 9221 | |
| புளத்கொஹுபிட்டிய | 9224 | |
| யட்டியாந்தொட்டை | 9227 | |
| தெஹிவெத்தர | 9230 | |
| தெரணியகலை | 9233 | |

03-443

## பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிகள் அமைச்சு

## கிராம அலுவலர் சேவையின் III ஆம் வகுப்பின் அலுவலர்களுக்கான கணினி அறிவைச் சோதிப்பதற்கான எழுத்துப் பரீட்சை மற்றும் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2019 (II) (2020)

1. கிராம அலுவலர் சேவையின் III ஆம் வகுப்பின் அலுவலர்களுக்கான தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு ஏற்புடையதான வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையொன்றும் கணினி ஆற்றலைப் பரீட்சிக்கும் எழுத்துமூலப் பரிசீலிப்பு ஒன்றும் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் 2020 ஆம் ஆண்டு மே மாதத்தில் நடாத்தப்படுமென்றும், அதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன என்றும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. கிராம அலுவலர் சேவையின் III ஆம் வகுப்பின் அலுவலர்களுக்கான இப்பரீட்சை கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், அநுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி எனும் நகரங்களில் மட்டும் நடாத்தப்படும். ஒவ்வொரு நகரத்திற்கும் உரிய இலக்கங்கள் கீழேயுள்ள அட்டவணையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இந்நோக்கத்திற்காக வரையறுக்கப்பட்ட நகரங்களில் மட்டுமே பரீட்சைகள் நடாத்தப்படும். விண்ணப்பப்படிவம் தொடர்பான தலைப்பு, இந்நகரங்களும் நகர இலக்கங்களும் பின்வரும் விளக்கத்தின்படி பூரணப்படுத்தப்படுதல் வேண்டும். விண்ணப்பிக்கப்பட்ட நகரம்/ நகரங்கள் பின்னர் மாற்றப்படுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. மேற்குறிப்பிடப்பட்ட எவையேனும் நிலையமொன்றிற்காகப் போதிய எண்ணிக்கையான பரீட்சார்த்திகள் இல்லாவிடின், அந்நிலையம் இரத்துச் செய்யப்பட்டு அதற்கண்மையிலுள்ள நிலையமொன்றுக்கு தொடர்பான விண்ணப்பதாரர்கள் அனுப்பப்படுவர். மேலும் தீர்மானிக்கப்பட்ட அனைத்து நகரங்களிலோ அல்லது கூடுதலான எண்ணிக்கையிலோ அல்லது பரீட்சை நிலையங்களை ஸ்தாபித்தல் தொடர்பாக போதுமானளவு எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்காதவிடத்து கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் பரீட்சை நடத்துவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| மாத்தறை | 04 |
| யாழ்ப்பாணம் | 05 |
| மன்னார் | 06 |
| முல்லைத்தீவு | 07 |
| திருகோணமலை | 08 |
| மட்டக்களப்பு | 09 |
| குருநாகல் | 10 |
| அநுராதபுரம் | 11 |
| பதுளை | 12 |
| இரத்தினபுரி | 13 |
| கிளிநொச்சி | 14 |

3. (i) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளரினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்துவது தொடர்பாக அவரால் விதிக்கப்பட்ட சட்டதிட்டங்களுக்குப் பரீட்சார்த்திகள் கட்டுப்படுவர்.

(ii) பரீட்சை பரீட்சார்த்திகளுக்கு விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள், வர்த்தமானி அறிவித்தலில் வேறாக அச்சிடப்பட்டுள்ளன. இச்சட்டங்கள் மீறப்படின் அவர்களுக்குப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்குக் கட்டுப்பட வேண்டி ஏற்படும்.

4. **தகைமைகள்**.- 2010.09.29 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் கிராம அலுவலர்களைச் சேர்த்துக்கொள்ளும் நடைமுறையின்படி, கிராம அலுவலர் சேவையின் III ஆம் பிரிவுக்கு உள்ளீர்க்கப்பட்டுள்ள அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமை பெறுவர்.

5. **பரீட்சை நடைமுறை.**- விண்ணப்பதாரிகள் கீழ்க்காணும் விடயங்களை உள்ளடக்கிய எழுத்துப் பரீட்சையொன்றிற்குத் தோற்றுதல் வேண்டும் :

| | விடயம் | விடய இலக்கம் | புள்ளிகள் | நேரம் |
|---|---|---|---|---|
| 1. | அலுவலக முறைகளும் கணக்கீடுகளும் | 01 | 100 | 2 மணி |
| 2. | விடயம் தொடர்பான தொழில் அறிவு | 02 | 100 | 2 மணி |
| 3. | கணினிப் பரீட்சை | 03 | 100 | 1 1/ 2 மணி |

5.1 **அலுவலக முறைகளும் கணக்கீடுகளும் (விடய இலக்கம் 01)**

***அலுவலக முறைகள்.***- கிராம அலுவலர் அலுவலகத்திலும் அரச அலுவலகங்களிலும் உபயோகப்படுத்தப்படும் அடிப்படை அறிவு செயல் ரீதியாகப் பயன்படுத்தப்படும் ஆற்றலைப் பரீட்சித்தல் மற்றும் அரசாங்க ஆவணங்களைச் சிறப்பாகப் புரிந்துகொண்டு தெளிவானதும் சுருக்கப்பட்டதுமான குறிப்புகள் மூலம் தமது கருத்துகளையும்/ அவதானிப்புக்களை உறுதியான முறையில் சமர்ப்பிக்கும் ஆற்றல் மற்றும் விடயம் தொடர்பானவை பற்றி அறிக்கையொன்றினை வரைபு செய்யும் ஆற்றலும் பரீட்சிக்கப்படும்.

***கணக்கீடு.***- கிராம அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளுடன் தொடர்பான மற்றும் அரசாங்க அலுவலகங்களில் கடைப்பிடிக்கப்படும் அடிப்படைக் கணக்கீடுகள் மற்றும் கணக்கு முறைகளும் நிதி நிர்வாக ஏடுகளின் செயற்பாடுகள், வழங்குதல் பற்றிய நடைமுறை பற்றிய விளக்கம் மற்றும் அறிவு என்பன எதிர்பார்க்கப்படும்.

I ஆம் பாகம்.- சுருக்க விடைகள், எதிர்பார்க்கப்படும் கேள்விகள் உள்ளடக்கப்பட்டிருக்கும் கேள்வித்தாளிலேயே விடையளிக்கப்படுதல் வேண்டும். எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கப்படுதல் வேண்டும். (25 புள்ளிகள்)

II ஆம் பாகம்.- மூன்று வினாக்களைக் கொண்டு அமைக்கப்பட்ட கட்டுரை வடிவான ஒரு வினாப்பத்திரமாகும். மூன்று வினாக்களுக்கும் விடையளிக்கப்படுதல் வேண்டும். (75 புள்ளிகள்)

5.2 **விடயம் சார்ந்த தொழில் அறிவு (விடய இலக்கம் 02).**- கிராம அலுவலர்களுடன் தொடர்பான பல்வேறு சட்டங்கள் மற்றும் அமைச்சுகள், திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் பிற அரசாங்க நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள கடமைகள் பற்றிய அறிவு பரீட்சிக்கப்படும்.

1 ஆம் பாகம்.- குறும்பதில்கள் எதிர்பார்க்கப்படும் வினாக்களைக் கொண்டதாகும். வினாப்பத்திரத்திலேயே விடையளிக்கப்படுதல் வேண்டும். எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். (25 புள்ளிகள்)

2 ஆம் பாகம்.- மூன்று வினாக்களைக் கொண்ட அமைப்பு ரீதியான கட்டுரை வடிவமைக்கப்பட்ட வினாப்பத்திரமொன்றாகும். மூன்று வினாக்களுக்கும் விடையளிக்கப்படுதல் வேண்டும். (75 புள்ளிகள்)

5.3 **கணினிப் பரிசோதனை (பாட இலக்கம் 03).**- விண்ணப்பதாரிக்குப் பின்வரும் ஆற்றல்கள் உள்ளனவா எனப் பரீட்சிப்பதே இப்பரிசோதனையின் நோக்கமாகும் :

| | |
|---|---|
| | தகவற் தொழில்நுட்பம் தொடர்பான அடிப்படை எண்ணக்கருக்கள் WINDOWS பணி செயல்முறைமை கோவை முகாமைத்துவம் |
| சொல்முறை வழிப்படுத்தலைச் செயலாற்றல் (word processing) | அடிப்படைத் திறன்கள், திரைக்குப் பரீட்சயமாதல், உரைத் தொகுப்பு, உரைப் பகுதிகளை ஒழுங்குபடுத்தல், எழுத்துரு வகைகள், துணைப்பந்தி, பந்தி, Tab Settings, உரைப்பகுதியொன்றைத் தேடலும் மீளிடலும் அட்சர மற்றும் இலக்கண அமைப்புக் கோளாறுகள் திரையை சீரமைத்தல், பக்கத்தை அமைத்தல், பதிவுப் பதிப்பு, அட்டவணை அமைப்பு, ஒழுங்கு வரிசையில் அமைத்தல், கோவை முகாமைத்துவம் பதிவு ஒன்றை பல முகவரிகளுக்கு அனுப்பச் செய்தல், Macro பயன்பாடு |

| | |
|---|---|
| விரிவுத்தாள் அமைத்தல் (Spread sheet) | **அடிப்படைத் திறன்கள்**<br>மாதிரிப் படிவ அமைப்பு (formatting), சலாகைகளும் வீச்சுக்களும், புதியவற்றை உட்படுத்தலும் அகற்றுதலும், தரவுகளை ஒழுங்கு வரிசையில் அமைத்தல், வரைபுகளை அமைத்தல்.<br>அச்சுப் பதிப்பு, @ செயல் முறை, Macro பயன்பாடு, கோவை முகாமைத்துவம் |
| தரவுத்தளம் (Data base) | அறிமுகம், அடிப்படைத் திறன்கள், தரவுத்தளமொன்றை உருவாக்கலும் பயன்படுத்தலும், மாதிரிகள், ஒருங்கிணைக்கப்பட்ட மாதிரி, popup மாதிரி, தொடர்பாடல் மற்றும் செய்தி சதுரங்கள், பரிசீலனைகள், அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளல், Macro பயன்பாடு |
| முன்வைப்பு/ படக்குறிப்பு | அடிப்படைத் திறன்கள், பதிப்பு, மாதிரியமைப்பு திட்டம் அமைத்தல், தொடர்புரு, துளையுரு (Erforated), வரைபு முன்வைப்பு (Graphic Representation), Body support and Animation, முன்வைப்புக் கருவிகள் பயன்பாடு, மூலப்பிரதி அமைத்தல் (Master Body), Body Print மற்றும் குறிப்புக்கள் |
| இணையம் | இணையம் பற்றிய அறிமுகம், உலகெங்கும் பரந்திருக்கும் வலையமைப்பு, Path I இனங்காணும் விதம், நடைமுறை இணையமைப்பு |
| மின்-அஞ்சல் | அறிமுகம், அடிப்படைத் திறன்கள், மின்னஞ்சலைப் பெற்றுக்கொள்ளல், மின்னஞ்சலை அனுப்புதல், அதற்குப் பதிலளித்தல், இணைப்புக்களின் உபயோகம் (Attachments), முகவரிகளை இனங்காண்பதற்கான குறுவழிகள் (Shortcuts), செய்திகளைப் பெற்றுக் கொள்ளல் |

இவ்வினாப்பத்திரம் இரண்டு பாகங்களைக் கொண்டது.

I ஆம் பாகம்.- பல்வகை/சுருக்க விடைகள், 40 வினாக்களைக் கொண்டது. நேரம் : 45 நிமிடங்கள் (40 புள்ளிகள்)

II ஆம் பாகம்.- பாதியளவு அமைப்பு ரீதியான 5 கேள்விகள் இருக்கும். நேரம் : 45 நிமிடங்கள் (60 புள்ளிகள்)

**குறிப்பு**.- 2010.09.29 ஆந் திகதிய கிராம அலுவலர்களுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையின் இணைப்பு 2 இன் 8 ஆம் பந்திக்கமைய தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்பட்ட கணினிச் செயற்பாட்டு அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொண்டுள்ள அலுவலர்கள் அல்லது மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களினால் வெளியிடப்பட்ட கணினிச் செயற்பாட்டு அனுமதிப்பத்திரத்துக்குச் சமனான அல்லது அதற்கு மேலான தரத்தினைக் கொண்ட சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டுள்ள அலுவலர்கள் இக்கணினிப் பரீட்சையினை சித்தியெய்தும் தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்படுவர். மேலும், தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் கணினிப் பிரயோக உதவியாளர் சான்றிதழினை (NVQ - மட்டம் 3) பெற்றுக்கொண்டுள்ள அலுவலர்களும் எழுத்துப் பரீட்சையிலிருந்து விலக்களிப்புப் பெறலாம்.

மேற்குறிப்பிட்ட பாடநெறிகளுக்கு மேலதிகமாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினூடாக ஏற்றுக்கொள்ளக்கூடிய பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கணினி அறிவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் பட்டம் மற்றும் பட்டம் தொடர்பாக கணினி அறிவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தினை ஒரு பிரதான பாடமாக கற்ற உத்தியோகத்தர் கிராம உத்தியோகத்தர் முதலாவது வினைத்திறமைகாண் தடைத்தாண்டல் பரீட்சையில் கணினி பரீட்சையிலிருந்து விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

6. சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மட்டும் இப்பரீட்சை நடாத்தப்படுமென்பதுடன் தொடர்பான சேவையில் சேர்வதற்கான பரீட்சைக்குத் தோன்றிய மொழியில் அல்லது அரச கரும மொழியொன்றில் அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும். போட்டிப் பரீட்சையொன்றின் சேவையில் சேர்ந்த அலுவலர்களுக்கும் தாம் கல்வி பெற்ற மொழி மூலம் அல்லது அரச கரும மொழியொன்றில் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும். பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் மொழியினைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

7. தாம் விருப்பமென்றால் ஒவ்வொரு விடயத்துக்காகவும் வெவ்வேறாக மற்றும் ஒவ்வொன்றும் வேறுபட்ட சந்தர்ப்பங்களில் அலுவலர்கள் தோற்ற முடியும். எவ்வாறெனினும் சித்தியடைவதற்காக ஒவ்வொரு விடயத்திலும் விதிக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளிலும் ஆகக்குறைந்தது நூற்றுக்கு நாற்பது வீத (40%) மாவது பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். எல்லாப் பாடங்களிலும் சித்தியடைந்து பரீட்சை பூரணத்துவப்படுத்தப்படும் ஆண்டில் பரீட்சை நடாத்தப்பட்ட இறுதித் தினம் இவ்வினைத் திறமைகாண் தடைத் தாண்டல் பரீட்சையில் சித்தியடைந்த நாள் எனக் கருதப்படும்.

8. பரீட்சை முடிவுகள், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் என்னிடம் வெளியிடப்படுவதுடன், பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் பெயர்கள் மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஊடாக விண்ணப்பதாரர்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

9. விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கமைய இருத்தல் வேண்டும். அந்த மாதிரி விண்ணப்பப்படிவத்தின்படி விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப்படிவத்தை தயாரித்துக்கொள்ள வேண்டியதுடன் அதன்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் விண்ணப்பதாரர்களினால் தமது சேவைப் பிரிவுடன் தொடர்பான பிரதேச செயலாளர் ஊடாக 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய விதமாகப் **"பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் (திணைக்கள மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைப் பிரிவு), இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு"** எனும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்பத்திரங்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் தொடர்பான தகவல்கள் பூரணப்படுத்தப்பட்டில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

10. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தோற்றும் எல்லாப் பாடங்களின்போதும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையக்கூடிய விதத்தில் தனது அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றைப் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு.
(iii) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அத்தோடு பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக முகம் மற்றும் காதினை மூடாத வண்ணம் பரீட்சை நிலையத்திற்குள் செல்ல வேண்டும். தனது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாத பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தில் உள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், உள் நுழையப்பட்ட விண்ணப்பதாரர்களை அடையாளம் கண்டு கொள்ளும் வகையில் மூடாத வண்ணம் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

11. **விண்ணப்பங்கள்**.- மாதிரி விண்ணப்பத்தின் இலக்கம் 1.0 தொடக்கம் 4.0 வரையான பந்திகள் முதலாம் பக்கத்துக்கும், 5.0 மற்றும் 7.0 வரையான பந்திகள் இரண்டாம் பக்கத்துக்கும் உட்படக்கூடிய விதமாக A4 அளவிலான தாளில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் தட்டச்சுப் பொறியில் தயாரிக்கப்பட முடியுமெனினும், அதனைப் பிழையற்ற முறையிலும் தெளிவாகவும் விண்ணப்பதாரரின் கையெழுத்தினால் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் இத்துடனுள்ள மாதிரியின் அமைப்பிலேயே தயாரிக்கப்பட வேண்டியதுடன், ஒரு விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட வேண்டியது ஒரு விண்ணப்பம் மட்டும் என்பதுடன், விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதிகளை அனுப்ப வேண்டாமென அறிவிக்கப்படுகிறது. மாதிரி விண்ணப்பத்துக்குப் பொருத்தமற்ற மற்றும் முழுமையற்ற விதத்தில் தகவல் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் அறிவிக்கப்படாமல் நிராகரிக்கப்படும். பரீட்சைக்கான விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப் படிவங்களில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடவும். மேலும், பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்றவாறு உள்ளதா என்பது பற்றி விண்ணப்பதாரர் கவனத்திற்கொள்ள வேண்டியதுடன், அவ்விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியொன்றைத் தம்மிடம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாக அமையும்.

12. முதற்தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அதிகாரிகளினால் எந்தப் பரீட்சைக் கட்டணமும் செலுத்தப்பட வேண்டியதில்லை. எவ்வாறெனினும் அதன் பின்னர் ஒரே தடவையில் அனைத்துப் பாடங்களுக்கும் தோற்றுவதாக இருந்தாலும் அல்லது இரண்டு பாடங்களில் தோற்றுவதாக இருந்தாலும் பரீட்சைக் கட்டணமாக 500 ரூபாவும், ஒரு பாடத்துக்காக மட்டும் அமர்வதெனின் பரீட்சைக் கட்டணம் 250 ரூபாவும் ஆகும். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இல் சேரக்கூடிய விதமாகத் தீவின் எந்தவொரு தபால் அல்லது உப தபால் அலுவலகத்திற்கு அல்லது மாவட்ட/பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு விண்ணப்பதாரரின் பெயரிலேயே செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டு விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் ஒட்டப்படுதல் வேண்டும். மேலும் அதன் நிழற்படப் பிரதியொன்றைத் தம்மிடம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாக அமையும். எக்காரணம் கொண்டேனும் இக்கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது. இப்பரீட்சைக்காகச் செலுத்தப்படும் கட்டணம் வேறு எந்தப் பரீட்சைக்காகவும் மாற்றப்பட இடமளிக்கப்படமாட்டாது. மேலும் பரீட்சைக் கட்டணத்திற்காக முத்திரை அல்லது பணம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

13. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் எனும் ஊகத்தின் அடிப்படையில் விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக் கால அட்டவணையின் பிரதியொன்றுடன் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும். விண்ணப்பதாரியொருவருக்குப் பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுதல், அவர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என்பதற்கான அங்கீகரிப்பாக கருதப்படக்கூடாது. பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்களினால் பரீட்சை மண்டப அதிகாரியிடம் அவர்களது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அனுமதிப்பத்திரமின்றிப் பரீட்சைக்கு அமருவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதும் உடனே அதனைப் பற்றிக் குறிப்பிட்டு அறிவித்தலொன்று பரீட்சைத் திணைக்கள ஆணையாளரினூடாக பத்திரிகை மற்றும் பரீட்சைத் திணைக்கள இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

பரீட்சைக்கு 2 அல்லது 3 நாட்களுக்கு முன்னரேனும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் (திணைக்கள மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை) யுடன் விசாரித்தறிதல் வேண்டும். அத்தகைய விசாரிப்பினைச் செய்யும்போது விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பன தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரிகள் எனின் அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தைக் குறிப்பிட்டு கூறப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தொலைநகல் இலக்கத்திற்கு கோரிக்கைக் கடிதம் ஒன்றை அனுப்புதல் கூடுதல் பயனுடையது. பரீட்சைகள் திணைக்களத்தினால் விசாரிக்கப்படும் சில விடயங்களை நிரூபிப்பதற்கென விண்ணப்பதாரியின் வசமிருக்கும் விண்ணப்பப்படிவத்தின் ஒரு பிரதி, பரீட்சைக் கட்டணப் பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் கடிதத்தினைப் பதிவுசெய்த பற்றுச்சீட்டு ஆகியவற்றை வைத்திருத்தல் உசிதமானது.

13.1 பரீட்சை அனுமதிப்பத்திரத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் உறுதிசெய்யப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தில் தனது சுட்டிலக்கத்தின்கீழ் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

14. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் உள்ள அலுவலர்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏற்ற வகையில் திணைக்களத் தலைவர்கள் கடமை விடுமுறை வழங்குதல் வேண்டும். போக்குவரத்துக் கட்டணங்கள் செலுத்தப்படமாட்டாது.

15. பரீட்சையினை நடாத்துவது தொடர்பாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்குப் பரீட்சார்த்திகள் கட்டுப்படுவர். அச்சட்டதிட்டங்கள் மீறப்படின், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனையொன்றிற்கு உட்படுவதற்கு அவருக்கு ஏற்படுவதுடன், இப்பரீட்சை அறிவித்தல் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டிராத, இவ்விடயத்துடன் தொடர்புடைய எவ்விடயம் பற்றியும் எனது முடிவு இறுதியான முடிவாகும்.

16. இவ்வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு இருப்பின் சிங்கள உரையே மேலோங்கும்.

எஸ். ஹெட்டியாராச்சி,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
நில மெதுர,
எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 5,
2020, பெப்புருவரி 25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**கிராம அலுவலர் சேவையின் வகுப்பு III இன் அலுவலர்களுக்கான கணினி அறிவினைச் சோதிப்பதற்கான எழுத்துப் பரீட்சை மற்றும் வினைத்திறன்காண் தடைத் தாண்டல் பரீட்சை - 2019 (II) 2020**

Efficiency Bar Examination For Officers In Class III Of Grama Niladhari Service - 2019 (II) 2020

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3

உரிய இலக்கத்தைக் கூண்டினுள் எழுதவும்.
(இதனை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

| | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|
| முதலாம் தெரிவு | 1 | |
| இரண்டாம் தெரிவு | 2 | |

(வர்த்தமானி அறிவித்தலின் 2.0 பந்தியின் படி தாங்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரங்களை விருப்புரிமை வரிசைப்படி குறிப்பிடுக.)
(இதனைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

---

1. 1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDANA)

1.2 விண்ணப்பதாரரின் முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : GUNAWARDANA, H. M. S. K.)

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. 2.1 பரீட்சை அனுமதிப் பத்திரம் அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.2 உரிய மாவட்டமும் மாவட்ட இலக்கமும் :----------
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்- உப பிரிவு 1 இல் குறிப்பிட்ட படி)

2.3 உரிய பிரதேச செயலாளர் பிரிவும், பிரதேச செயலாளர் இலக்கமும்
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்- உப பிரிவு 1 இல் குறிப்பிட்டபடி)

2.4 உரிய மாவட்டமும் பிரதேச செயலாளர் பிரிவும் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

3. 3.1 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

3.2 பால்- பெண்/ ஆண் :
பெண் - 1
ஆண் - 0
(தொடர்பான இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

3.3 பிறந்த திகதி :-
ஆண்டு மாதம் திகதி

3.4 தொலைபேசி இல. :

4. தாங்கள் இம்முறை பரீட்சையில் தோற்றும் விடயம்/விடயங்கள் (வர்த்தமானி அறிவித்தலின் 5 ஆம் பந்தியைப் பார்க்கவும்):

| தொடர் இலக்கம் | விடயம் | பரீட்சை இலக்கம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |

5. 5.1 உரிய தரம் :----.

5.2 பதவி :----.

5.3 தொடர்பான தரத்தில் நியமனம் பெற்ற திகதி :----.

6. கவனித்தல் வேண்டும்.- வர்த்தமானி அறிவித்தலில் காண்பிக்கப்பட்டுள்ளபடி பரீட்சைக் கட்டணத்திற்காக விதிக்கப்பட்ட பணம் செலுத்தப்பட்டதாக தபால்/உப தபால் அலுவலகத்தினால் விண்ணப்பதாரரின் பெயரிலேயே பெறப்பட்ட பற்றுச்சீட்டு இங்கு கழறாதவாறு ஒட்டப்படுதல் வேண்டும் :

பற்றுச்சீட்டு இலக்கம் :----.

தபால்/ உப தபால் அலுவலகம் :----.

திகதி :----.

பணம் ரூபா :----.

7. மேலே குறிப்பிடப்பட்ட விபரங்கள் சரியானவை என்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலங்களில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்கு உரித்துண்டு என்றும் குறிப்பிடுகின்றேன்.

மேலும் பரீட்சையினை நடாத்துவது தொடர்பாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்படுவதாகவும் குறிப்பிடுகின்றேன்.

-----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**பிரதேச செயலாளரின் உறுதிப்படுத்தல் :**

......................................... பிரதேச செயலாளர் பிரிவில் ......................................... கிராம அலுவலர் பகுதியில் கடமையாற்றும் கிராம அலுவலர் திரு./ திருமதி/ செல்வி ......................................... என்பவர்,

(i) என் முன்னிலையில் கையொப்பமிட்டாரென்றும்,

(ii) மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சித்துப் பார்க்கப்பட்டனவென்றும்,

(iii) அலுவலர்/ பெண் அலுவலர் இப்பரீட்சையில் தோற்றுவதற்குத் தகுதியானவரென்றும்,

(iv) முதலாவது அமர்வு காரணமாக பரீட்சைக் கட்டணத்திலிருந்து அலுவலர் விலக்களிக்கப்படுகின்றார்/ குறித்துரைக்கப்பட்ட பரீட்சைக் கட்டணப் பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது என்றும் நான் உறுதிப்படுத்துகின்றேன். (அவசியமற்றவற்றை வெட்டிவிடுக.).

-----,
பிரதேச செயலாளரின் கையொப்பமும்,
அலுவலக முத்திரையும்.

பெயர்:----.

பதவிப் பெயர்:----

முகவரி :-----.

திகதி :-----.

## அட்டவணை I

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| கொழும்பு | 1103 | கொழும்பு 0 1 |
| கொலன்னாவை | 1106 | |
| கடுவெல | 1109 | |
| ஹோமாகம | 1112 | |
| ஹங்வெல்ல | 1115 | |
| பாதுக்க | 1118 | |
| மகரகம | 1121 | |
| ஸ்ரீஜயவர்தனபுர கோட்டே | 1124 | |
| திம்பிரிகஸ்யாய | 1127 | |
| தெஹிவளை | 1130 | |
| இரத்மலானை | 1131 | |
| மொரட்டுவை | 1133 | |
| கெஸ்பாவ | 1136 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| நீர்கொழும்பு | 1203 | கம்பஹா 0 2 |
| கந்தான | 1206 | |
| திவுலுப்பிட்டிய | 1209 | |
| மீரிகம | 1212 | |
| மினுவங்கொட | 1215 | |
| வத்தளை | 1218 | |
| ஜா-எல | 1221 | |
| கம்பஹா | 1224 | |
| அத்தனகல்ல | 1227 | |
| தொம்பே | 1230 | |
| மஹர | 1233 | |
| களனிய | 1236 | |
| பியகம | 1239 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| பாணந்துறை | 1303 | களுத்துறை 0 3 |
| பண்டாரகம | 1306 | |
| ஹொரண | 1309 | |
| இங்கிரிய | 1310 | |
| புலத்சிங்ஹள | 1312 | |
| மதுராவல | 1315 | |
| மிலனிய | 1318 | |
| களுத்துறை | 1321 | |
| பேருவல | 1324 | |
| தொடங்கொட | 1327 | |
| மத்துகம | 1330 | |
| அகலவத்த | 1333 | |
| பாலிந்தநுவர | 1336 | |
| வளல்லாவிட்ட | 1339 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| தும்பனை | 2103 | கண்டி 0 4 |
| பூஜாபிட்டிய | 2106 | |
| அக்குறணை | 2109 | |
| பாததும்பர | 2112 | |
| பன்னவல | 2115 | |
| உடதும்பர | 2118 | |
| மினிப்பை | 2121 | |
| மெததும்பர | 2124 | |
| குண்டசாலை | 2127 | |
| கங்கவட கோரளை | 2130 | |
| ஹலிஸ்பத்துவ | 2133 | |
| ஹதரலியத்த | 2134 | |
| யட்டிநுவர | 2136 | |
| உடுநுவர | 2139 | |
| தொலுவ | 2142 | |
| பாத்தஹேவாஹெட்ட | 2145 | |
| தெல்தொட | 2148 | |
| உடபலாத | 2151 | |
| கங்கஇஹள கோரளை | 2154 | |
| பஸ்பாகே கோரளை | 2157 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| கலேவெல | 2203 | மாத்தளை 0 5 |
| தம்புள்ள | 2206 | |
| நாஉல | 2209 | |
| பள்ளேபொல | 2212 | |
| யடவத்த | 2215 | |
| மாத்தளை | 2218 | |
| அம்பகஹ கோரளை | 2221 | |
| யக்கல பள்ளேகம | 2224 | |
| வில்கமுவ | 2227 | |
| ரத்தொட்ட | 2230 | |
| உக்குவல | 2233 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| கொத்மலை | 2303 | நுவரெலியா 0 6 |
| ஹங்குரன்கெத்த | 2306 | |
| வலப்பனை | 2309 | |
| நுவரெலியா | 2312 | |
| அம்பகமுவ | 2315 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| பெந்தோட்டை | 3103 | காலி 0 7 |
| பலபிட்டிய | 3106 | |
| கரந்தெனிய | 3109 | |
| எல்பிட்டி | 3112 | |
| நியாகம | 3115 | |
| தவலம | 3118 | |
| நெழுவ | 3121 | |
| நாகொடை | 3124 | |
| பத்தேகம | 3127 | |
| வெலிவிடிய-திவிதுர | 3130 | |
| அம்பலாங்கொடை | 3133 | |
| ஹிக்கடுவ | 3136 | |
| கடவத்ஸதர | 3139 | |
| போபே-போத்தல | 3142 | |
| அக்மீமன | 3145 | |
| யக்களமுல்ல | 3148 | |
| இமதுவ | 3151 | |
| கோனபீனுவல | 3154 | |
| ஹபராதுவ | 3157 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| பிடபெத்தர | 3203 | மாத்தறை 0 8 |
| கோடபொல | 3206 | |
| பஸ்கொட | 3209 | |
| முலடியன | 3212 | |
| அதுரலிய | 3215 | |
| அக்குரஸ்ஸ | 3218 | |
| வெலிப்பிட்டிய | 3221 | |
| மாலிம்பட | 3224 | |
| கம்புறுபிட்டிய | 3227 | |
| ஹக்மன | 3230 | |
| கிரிந்த புஹுல்வெல்ல | 3233 | |
| திஹகொட | 3236 | |
| வெலிகம | 3239 | |
| மாத்தறை | 3242 | |
| தெவிநுவர | 3245 | |
| திக்வெல்ல | 3248 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| சூரியவெவ | 3303 | அம்பாந்தோட்டை 0 9 |
| லுணுகம்வெஹெர | 3306 | |
| திஸ்ஸமகாராம | 3309 | |
| அம்பாந்தோட்டை | 3312 | |
| அம்பலந்தோட்டை | 3315 | |
| அங்குணுகொலபெலஸ்ஸ | 3318 | |
| வீரகெட்டிய | 3321 | |
| கடுவன | 3324 | |
| ஓகேவெவ | 3327 | |
| பெலியத்த | 3330 | |
| தங்கல்ல | 3333 | |
| வலஸ்முல்ல | 3336 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| ஊர்காவற்துறை (தீவகம் வடக்கு) | 4103 | யாழ்ப்பாணம் 1 0 |
| சங்கானை (வலிகாமம் மேற்கு) | 4106 | |
| சண்டிலிப்பாய் (வலிகாமம் தென்மேற்கு) | 4109 | |
| தெல்லிப்பளை (வலிகாமம் வடக்கு) | 4112 | |
| உடுவில் (வலிகாமம் தெற்கு) | 4115 | |
| கோப்பாய்(வலிகாமம் கிழக்கு) | 4118 | |
| கரவெட்டி(வடமராட்சி) | 4121 | |
| மருதங்கேணி (வடமராட்சி கிழக்கு) | 4124 | |
| பருத்தித்துறை (வடமராட்சி வடக்கு) | 4127 | |
| சாவகச்சேரி (தென்மராட்சி) | 4130 | |
| நல்லூர் | 4133 | |
| யாழ்ப்பாணம் | 4136 | |
| வேலனை (தீவகம் தெற்கு) | 4139 | |
| தீவுப்பகுதி | 4142 | |
| காரைநகர் | 4145 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| மன்னார் | 4203 | மன்னார் 1 1 |
| மாந்தை மேற்கு | 4206 | |
| மடு | 4209 | |
| நானாட்டான் | 4212 | |
| முசலி | 4215 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| வவுனியா வடக்கு | 4303 | வவுனியா 1 2 |
| வவுனியா தெற்கு | 4306 | |
| வவுனியா | 4309 | |
| வென்கலசெட்டிகுளம் | 4312 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| துணுக்காய் | 4403 | முல்லைத்தீவு 1 3 |
| மாந்தை கிழக்கு | 4406 | |
| புதுக்குடியிருப்பு | 4409 | |
| ஒட்டுசுட்டான் | 4412 | |
| கரைதுறைப்பற்று | 4415 | |
| வெலிஓய | 4418 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| பச்சிளைப்பள்ளி | 4503 | கிளிநொச்சி 1 4 |
| கண்டாவளை | 4506 | |
| கரைச்சி | 4509 | |
| பூநகரி | 4512 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| கோரளைப்பற்று வடக்கு | 5103 | மட்டக்களப்பு 1 5 |
| கோரளைப்பற்று மேற்கு (ஓட்டமாவடி) | 5106 | |
| கோரளைப்பற்று வாழைச்சேனை | 5109 | |
| ஏறாவூர் பற்று | 5112 | |
| ஏறாவூர் நகரம் | 5115 | |
| மண்முனை வடக்கு | 5118 | |
| மண்முனை மேற்கு | 5121 | |
| காத்தான்குடி | 5124 | |
| மண்முனைப்பற்று | 5127 | |
| மண்முனை தென்மேற்கு | 5130 | |
| போரதீவுப்பற்று | 5133 | |
| மண்முனை தெற்கு | 5136 | |
| கோரளைப்பற்று தெற்கு | 5139 | |
| கோரளைப்பற்று மத்தி | 5142 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| தெஹியத்தகண்டிய | 5203 | அம்பாறை 1 6 |
| பதியதலாவ | 5206 | |
| மாஓய | 5209 | |
| உகன | 5212 | |
| அம்பாறை | 5215 | |
| நாவிதன்வெளி | 5216 | |
| சம்மாந்துறை | 5218 | |
| கல்முனை தமிழ் | 5224 | |
| சாய்ந்தமருது | 5225 | |
| காரைதீவு | 5227 | |
| நிந்தவூர் | 5230 | |
| அட்டாளைச்சேனை | 5233 | |
| இறக்காமம் | 5234 | |
| அக்கரைப்பற்று | 5236 | |
| ஆலையடிவேம்பு | 5239 | |
| தமன | 5242 | |
| திருக்கோவில் | 5245 | |
| பொத்துவில் | 5248 | |
| லாகுகல | 5251 | |
| கல்முனை முஸ்லிம் | 5254 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| பதவிசிறிபுற | 5303 | திருகோணமலை 1 7 |
| குச்சவெளி | 5306 | |
| கோமரங்கடவெல | 5309 | |
| மொரவெவ | 5312 | |
| பட்டினமும் சூழலும் | 5315 | |
| தம்பலகாமம் | 5318 | |
| கந்தளாய் | 5321 | |
| கிண்ணியா | 5324 | |
| மூதூர் | 5327 | |
| சேருவில | 5330 | |
| வெருக்கல ஈச்சிலம்பத்துவ | 5333 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| கிரிபாவ | 6103 | குருநாகல் 1 8 |
| கல்கமுவ | 6106 | |
| எஹத்துவெவ | 6109 | |
| அம்பன்பொல | 6112 | |
| கொடவெஹெர | 6115 | |
| ரஸ்நாயகபுர | 6118 | |
| நிகவரடிய | 6121 | |
| மஹவ | 6124 | |
| பொல்பிதிகம | 6127 | |
| இப்பாகமுவ | 6130 | |
| கணேவத்த | 6133 | |
| வாறியபொல | 6136 | |
| கொபய்கணே | 6139 | |
| பிங்கிரிய | 6142 | |
| பமுணாகொடுவ | 6149 | |
| மாஸ்பொத | 6151 | |
| குருநாகல் | 6154 | |
| மல்லவபிட்டிய | 6157 | |
| மாவத்தகம | 6160 | |
| ரீதிகம | 6163 | |
| வீரம்புகெதர | 6166 | |
| குளியாப்பிட்டி கிழக்கு | 6169 | |
| குளியாப்பிட்டி மேற்கு | 6172 | |
| உடுபத்தாவ | 6175 | |
| பண்ணல | 6178 | |
| நாரம்மல | 6181 | |
| அளவ்வை | 6184 | |
| பொல்கஹவெல | 6187 | |
| பண்டுவஸ்நுவர கிழக்கு | 6190 | |
| பண்டுவஸ்நுவர மேற்கு | 6193 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| கற்பிட்டி | 6203 | புத்தளம் 1 9 |
| வனாதவில்லுவ | 6206 | |
| கருவலகஸ்வெவ | 6209 | |
| நவகத்தேகம | 6212 | |
| புத்தளம் | 6215 | |
| முந்தல் | 6218 | |
| மஹா கும்புக்கடவல | 6221 | |
| ஆனமடுவ | 6224 | |
| பள்ளம | 6227 | |
| ஆரச்சிகட்டுவ | 6230 | |
| சிலாபம் | 6233 | |
| மாதம்பை | 6236 | |
| மகாவெவ | 6239 | |
| நாத்தாண்டிய | 6242 | |
| வென்னப்புவை | 6245 | |
| தங்கொட்டுவ | 6248 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| பதவிய | 7103 | அநுராதபுரம் 2 0 |
| கெபிதிகொல்லாவ | 7106 | |
| மதவாச்சி | 7109 | |
| மஹவிலச்சிய | 7112 | |
| மத்திய நுவரகம் பளாத | 7115 | |
| ரம்பேவ | 7118 | |
| கஹடகஸ்திகிலிய | 7121 | |
| ஹொரவபொத்தான | 7124 | |
| கலென்பிந்துனுவெவ | 7127 | |
| மிஹிந்தலை | 7130 | |
| கிழக்கு நுவரகம் பளாத | 7133 | |
| நாச்சியதுவ | 7136 | |
| நொச்சியாகம | 7139 | |
| ராஜாங்கனை | 7142 | |
| தம்புத்தேகம | 7145 | |
| தலாவ | 7148 | |
| திரப்பனை | 7151 | |
| கெகிராவ | 7154 | |
| பளுகஸ்வெவ | 7157 | |
| இப்பாகமுவ | 7160 | |
| கல்னேவ | 7163 | |
| பலாகல | 7166 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| ஹிங்குராங்கொட | 7203 | பொலன்னறுவ 2 1 |
| மெதிரிகிரிய | 7206 | |
| லங்காபுர | 7209 | |
| வெலிகந்தை | 7210 | |
| திம்பலாகம | 7212 | |
| தமன்கடுவ | 7215 | |
| எலஹர | 7218 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| மகியங்கனை | 8103 | பதுளை 2 2 |
| ரீதிமாலியத்தை | 8106 | |
| மீகஹகிவுல | 8109 | |
| கன்தகெடிய | 8112 | |
| சொரணாதோட்டை | 8115 | |
| பசறை | 8118 | |
| லுனுகல | 8119 | |
| பதுளை | 8121 | |
| ஹாலி எல | 8124 | |
| ஊவா-பரணகம | 8127 | |
| வெலிமடை | 8130 | |
| பண்டாரவளை | 8133 | |
| எல்ல | 8136 | |
| அப்புத்தளை | 8139 | |
| ஹல்தும்முல்ல | 8142 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| பிபில | 8203 | மொனராகல 2 3 |
| மடுல்ல | 8206 | |
| மெதகம | 8209 | |
| சியம்பலாண்டுவ | 8212 | |
| மொனராகல | 8215 | |
| படல்கும்புர | 8218 | |
| புத்தல | 8221 | |
| வெள்ளவாய | 8224 | |
| கதிர்காமம் | 8227 | |
| தனமல்வில | 8230 | |
| செவனகல | 8233 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| எஹலியகொடை | 9103 | இரத்தினபுரி 2 4 |
| குருவிட்ட | 9106 | |
| கிரிஎல்ல | 9109 | |
| இரத்தினபுரி | 9112 | |
| இம்புல்பே | 9115 | |
| பலாங்கொடை | 9118 | |
| ஓபநாயக | 9121 | |
| பெல்மதுளை | 9124 | |
| எலபத்த | 9127 | |
| அயகம | 9130 | |
| கலவான | 9133 | |
| நிவிதிகல | 9136 | |
| கஹவத்த | 9139 | |
| கொடகவெல | 9142 | |
| வெலிகேபொல | 9145 | |
| எம்பிலிபிட்டிய | 9148 | |
| கொலன்ன | 9151 | |

| பிரதேச செயலாளர் பிரிவு | பிரதேச செயலாளர் பிரிவு இலக்கம் | உரிய மாவட்டமும் இலக்கமும் |
|---|---|---|
| ரம்புக்கணை | 9203 | கேகாலை 2 5 |
| மாவனல்ல | 9206 | |
| அரணாயக | 9209 | |
| கேகாலை | 9212 | |
| கலிகமுவ | 9215 | |
| வரகாபொல | 9218 | |
| ருவன்வெல்ல | 9221 | |
| புளத்கொஹுபிட்டிய | 9224 | |
| யட்டியாந்தொட்டை | 9227 | |
| தெஹிவெத்தர | 9230 | |
| தெரணியகலை | 9233 | |

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித் தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III ஆவது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I ஆவது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III ஆவது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V ஆவது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI ஆவது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 40.00 | 60.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III ஆவது தொகுதி | 15.00 | 60.00 |
| I ஆவது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| III ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V ஆவது பகுதி | 123.00 | 60.00 |
| VI ஆவது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2020**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மாச்சு** | .. | வெள்ளி | 06.03.2020 | .. | நண்பகல் 12 | வியாழன் | 20.02.2020 |
| | | வெள்ளி | 13.03.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.02.2020 |
| | | வெள்ளி | 20.03.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.03.2020 |
| | | வெள்ளி | 27.03.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.03.2020 |
| **ஏப்பிறல்** | .. | வெள்ளி | 03.04.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.03.2020 |
| | | வியாழன் | 09.04.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.03.2020 |
| | | வெள்ளி | 17.04.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.04.2020 |
| | | வெள்ளி | 24.04.2020 | .. | நண்பகல் 12 | வியாழன் | 09.04.2020 |
| | | வியாழன் | 30.04.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.04.2020 |
| **மே** | .. | புதன் | 06.05.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.04.2020 |
| | | வெள்ளி | 15.05.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.04.2020 |
| | | வெள்ளி | 22.05.2020 | .. | நண்பகல் 12 | வியாழன் | 30.04.2020 |
| | | வெள்ளி | 29.05.2020 | .. | நண்பகல் 12 | புதன் | 06.05.2020 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.